பக்கங்கள்: 10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 21 வெள்ளிக்கிழமை 08.10.2021 கதிர் 337

### இது ரகசியம் அல்ல!

'புலி வருகுது, புலி வருகுது' என்று கூறிக் கொண்டிருக்க, ஒரு நாள் புலி வந்த மாதிரி, வடக்கு ஆளுநர் மாற்றம், இதோ வருகின்றது, அதோ வருகிறது என்று கூறிக் கொண்டிருக்க, கடைசியில் உண்மையில் வந்தே விட்டது.

ஜீவன் தியாகராஜாவை

☞2

## மேலும் 44 பேர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 44 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

☞2

## வடக்கின் புதிய ஆளுநராக ஜீவன் தியாகராஜா நியமனம்

வடக்கின் புதிய ஆளுநராக நேற்று ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டுள்ளார் என்று மிக நம்பகமாக அறியவருகின்றது.

அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் பதவி ஏற்கக் கூடும் எனத் தெரிகின்றது.

அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களில் பணியாற்றி வந்த ஜீவன் தியாகராஜா தேர்தல் ஆணையாளராக நியமிக்கப் பட்டிருந்தார்.

அப்பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டு வடக்கு ஆளுநராகப் பதவி ஏற்பார் எனத் தெரிகிறது.



## நேற்று தொற்று 772

இலங்கையில் நேற்று 772 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில்

☞2

# புதிய உத்வேகத்துடன் பணியாற்றத் தயாராகுக!

### மாவட்ட செயலாளர்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள்



கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட பின்னடைவுகளைச் சமாளிக்க, புதிய பொதுமைப்படுத்தலின் கீழ், புது உத்வேகத்துடன் பணியாற்றத் தயாராகுமாறு மாவட்ட செயலாளர்களிடம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

☞2

## பிரபாகரனை மீட்க அனுமதி வழங்காததாலேயே இலங்கைக்கு எதிராக சர்வதேசம் போர்க்கொடி!

### இப்படிக் காரணம் கூறுகின்றார் எஸ்.பி.



அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள், இறுதிப் போர்க் காலத்தில் போரை நிறுத்தி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை அழைத்துச் செல்ல முயற்சித்தபோது அதற்கு இலங்கை அரசு அனுமதிக்காமையின் காரணமாகவே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன.

- இவ்வாறு அரச தரப்பு எம்.பி. எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள்

☞2

## 'பட்ஜட்' ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அதனைச் சபையில் சமர்ப்பித்தார்.

ஒதுக்கீட்டு சட்டமூலத்துக்கமைய 2022இல் அரசின் முழுச் செலவீனம் 2,505.3 பில்லியன் ரூபாவாகக்

☞2



## நாடாளுமன்றத்திலும் ஒலித்தது 'மெனிக்கே மகே ஹித்தே' பாடல்



'மெனிக்கே மகே ஹித்தே' என்ற பாடலானது அதியுயர் சபையான நாடாளுமன்றத்திலும் நேற்று ஒலிபரப்பானது.

இலங்கையின் இளம் பாடகி, யொஹானி டி சில்வா பாடிய 'மெனிக்கே மகே ஹித்தே' என்ற பாடலானது தேசிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேச

☞2

## அரசை ஆதரித்த டயனா கமகே சஜித்தின் கட்சியிலிருந்து நீக்கம்



### பறிபோகுமா தேசியப்பட்டியல் எம்.பி. பதவி?

நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகேவை ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்துள்ளார்.


கடந்த பொதுத்

☞2

## யாழ். பல்கலை பட்டமளிப்பு விழா நிகழ்நிலையில்; 1,700 பேரின் பட்டங்கள் நேற்று உறுதிப்படுத்தல்!



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று நிகழ்நிலையில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி

☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அந்தப் பதவியில் நியமிப்பது பற்றிய விடயம் கடந்த ஜூலை மாதத்தில் இருந்தே அரசல் புரசலாக அடிபட்டு வந்த விடயம் தான். தன்னுடன் அப்போதிருந்தே இது குறித்த உரையாடப்பட்டது என்பதை எனக்குத் தெரிந்த ஒருவருக்கு அவரே ஊர்ஜிதப்படுத்தியிருந்தார்.

புதிய ஆளுநர் நியமினம் பெறும் ஜீவன் தியாகராஜா மனித உரிமை ஆர்வலராகவும், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் ஊடாகவும் செயற்பட்டவர். வயது 62.

முன்னர் நீலன் திருச்செல்வத்தோடு மிக நெருக்கமாகப் பழகியவர். நீலன் கொலையுண்ட சமயம் அதனால் பெரிதும் இடிந்து போய் இருந்தவர். அவ்வளவு நெருக்கம் நீலனுடன்.

முன்னர் மனித உரிமைகளுக்கான நிறுவனம் (Institute For Human Rights) என்ற அமைப்பை நடத்தி, பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக நீதிமன்றங்கள் மூலம் நடவடிக்கைகளை எடுத்தவர்.

இப்போது யாழ்ப்பாணத்தில் பட்டையைக் கிளப்பும் சட்டத்தரணி றெமடியஸ் கூட, சட்டக் கல்லூரியால் வெளியே வந்து, சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்ததும் சில வருடங்கள் ஜீவன் தியாகராஜாவின் மனித உரிமைகள் நிறுவனத்தில்தான் பணியாற்றினார்.

ஜீவன் தியாகராஜா இந்து. யாழ்ப்பாணத்துத் தொடர்புள்ளவர். மனைவி ஷியாமா பெர்னாண்டோ நீர்கொழும்பைச் சேர்ந்தவர். கிறிஸ்தவர். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள்.

ஜீவன் தியாகராஜா மவுண்ட்லவேனியா சென் தோமஸில் கல்வி கற்றவர். கொழும்பில் கற்றறிந்த வட்டாரங்களில் மதிக்கப்பட்டவர். அரசியல் உயர் குழாமுடன் கடந்த முப்பது வருடங்களுக்கு மேல் நெருங்கிப் பழகி வந்தவர்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தின் கடைசிக் கட்டங்களில் ஆட்சியாளருக்குத் துணையாகச் செயற்பட்டவர் இவர் என்று ஒரு விமர்சனம் உண்டு.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போது மொழி ஆணைக்குழுவின் ஆணையாளராக நியமிக்கப்பட்டவர்.

பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் – இருபதாவது அரசமைப்புத் திருத்தத்துக்குப் பின்னர் கொண்டு வரப்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஓர் ஆணையாளராக நியமிக்கப்பட்டு இதுவரை அப்பதவியில் இருந்து வருகின்றார்.

அதை இராஜினாமாச் செய்து விட்டுத்தான் அவர் ஆளுநர் பதவியை ஏற்க வேண்டும்.

தற்போதைய ஆளுநர் திருமதி சாள்ஸ் பொருத்தமான பிறிதொரு பதவிக்கு நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அது இடம்பெற்றதும், பெரும்பாலும் அடுத்த வாரத்தில் முதல் தினங்களில் வடக்கு ஆளுநராக ஜீவன் தியாகராஜா புதிய ஆளுநராகப் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ராஜபக்ஷ அரசின் சர்வதேச உறவாடல் முறைமையில் பெரும் தலைகீழ் மாற்றங்கள் நேர்ந்து வருகின்றமை குறித்து கடந்த சில நாள்களாக இப்பத்தியில் கோடி காட்டி வந்தேன். அவற்றின் பிரதிபலிப்பும் கூட இந்தப் புதிய ஆளுநர் நியமனத்தில் செல்வாக்குச் செலுத்தியிருக்கக் கூடும் என்ற சந்தேகம் எனக்கு உண்டு.

தமிழர் தரப்புகளுடன் சேர்ந்து பணியாற்றக் கூடிய ஒருவரை ஆளுநராக நியமியுங்கள், மாகாண சபைத் தேர்தல் வரை மாகாணப் பணிகளை முன்னெடுக்கவும், மாகாண சபைத் தேர்தலின் பின்னர் தெரிவாகும் மாகாண சபையுடன் சேர்ந்து பணியாற்றவும் என்று அரசுத் தலைமைக்கு மேற்குலகு மற்றும் அயலகத்திலிருந்து வழிகாட்டல் விடுக்கப்பட்டிருக்கக் கூடும்.

அந்த வகையில் தமிழர் தரப்பின் இணக்கத்துடன் – அல்லது விருப்புடன் – அல்லது சாதக சமிக்ஞையுடன் – இந்த நியமனம் இடம்பெற்றிருக்கலாம் என்று ஒரு பேச்சு உண்டு.

எனக்கு ஒரு விடயம் மட்டும் தெரியும். கூட்டமைப்பில் செல்வாக்கு மிக்க சுமந்திரன் எம்.பியை விட ஜீவன் தியாகராஜா ஐந்து வயது மூத்தவர். ஆனால் கடந்த இரண்டு தசாப்த காலமாக இருவரும் நல்ல நட்புரிமையுடன் பழகுபவர்கள்.

இந்த மைனஸ் பொயிண்ட்ஸ் இருந்தும் அவர் – ஜீவன் தியாகராசா – ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். அது தான் பிளஸ் பொயிண்டா, அதில் ஏதும் சூத்திரம் புதைந்திருக்கின்றதா என்பதை இனித்தான் தேடிப் பார்க்க வேண்டும்.

மலிந்தால் எப்படியும் சந்தைக்கு வரும்தானே...!

★ ★ ★

நேற்றுமுன்தினம் கூட்டமைப்பு நாடாளுமன்றக் கூட்டத்தில் நடந்த சுவாரஸியமான விடயங்களை இன்று தருவேன் என நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன். புதிய ஆளுநர் நியமனம் விவகாரம் இன்று இடத்தைப் பிடித்து விட்டது. அதனால் நாடாளுமன்றக் குழுக் கூட்ட விடயங்களை நாளை பார்ப்போம் வாசகர்களே. அது தள்ளிப் போவதற்காக மன்னியுங்கள்.

– மின்னல் –

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 23 ஆயிரத்து 550 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 435 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 78 ஆயிரத்து 761 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
கலையரங்கில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் பல்கலைக் கழகத்தின் யூரியூப் மற்றும் முகப்புத்தக பக்கங்களினூடாக நேரலையில் ஒளிபரப்பப்பட்டது.

இரண்டு அமர்வுகளாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுமார் 1,700 பேரின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

நாட்டில் நிலவும் கொரோனாப் பெருந்தொற்று நிலைமைகள் காரணமாக பட்டமளிப்பு விழாவில் பெருமளவானோர் ஒன்றுகூடுவதற்கு அனுமதிக்க முடியாது என்றும், அதனை நிகழ் நிலையில் நடாத்துவதற்குத் தடை ஏதுமில்லை என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தியிருந்த நிலையில் மாணவர்களின் பட்டங்களை உறுதிப்படுத்துவதற்காக நேற்று நிகழ்நிலைப் பட்டமளிப்பு நடைபெற்றது.

இதேநேரம், நாடு வழமைக்குத் திரும்பியதும் மாணவர்களுக்கான சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழா நடத்தப்படவுள்ளது எனத் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

## 'பட்ஜட்' ஒதுக்கீட்டுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
காணப்படுகின்றது.

இதன்படி, அடுத்த ஆண்டில் அரசின் செலவு 3,300 கோடி ரூபாவால் குறைவடையவுள்ளது.

இதேவேளை, பொதுச் சேவைகளுக்காக 12.6 பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

அத்துடன், ஜனாதிபதிக்காக 2.78 பில்லின் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் ஜனாதிபதியின் செலவுக்காக ஒதுக்கப்படும் நிதி இந்த வருடத்தை விடவும் 6.6 பில்லியன் ரூபாவால் குறைவடையவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு 373 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது இந்த வருடத்தை விடவும் 18 பில்லியன் ரூபாய் அதிகரிப்பாகும்.

இதேவேளை, நிதி அமைச்சரின் வரவு – செலவுத் திட்ட உரையை நவம்பர் 12 ஆம் திகதி நடத்தவும், அதன் 3ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பை டிசம்பர் 10ஆம் திகதி நடத்தவும் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புதிய உத்தேவகத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அரசின் திட்டமிடல்கள் பிரகாரம் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாவிட்டாலும், அனைத்துத் தப்பினரதும் அர்ப்பணிப்பினூடாக, கொரோனாத் தொற்றொழிப்புக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியும். தடுப்பூசி ஏற்றலுடன், புதிய பொதுமைப்படுத்தலை நோக்கி நகரக் கிடைத்த வாய்ப்பைப் புறக்கணிக்காது இலக்குகளை வெற்றிகொள்வது அனைவரதும் பொறுப்பு என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

மாவட்டச் செயலாளர்களுடன் நேற்று முற்பகல் இடம்பெற்ற வீடியோ தொழில்நுட்பத்துடனான கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, முழு அரச இயந்திரமும் அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் செயற்பட வேண்டும். இதில், மாவட்டச் செயலாளர்களுக்கு மிகப் பெரியபங்குகாணப்படுகிறதுஎனவும்இதன் போது ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது மாவட்ட செயலாளர்கள், ஜனாதிபதி எடுத்துள்ள தீர்மானத்துக்குப் பக்க பலமாக இருந்து, இலக்குகளை வென்றெடுப்பதற்காக வேகமானதும் திறமையானதுமான பொதுச் சேவையை வழங்கத் தாயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

பொருத்தமற்ற சுற்றுநிரூபங்கள் மற்றும் கட்டளைகள் – சட்டங்கள் என்பன, இந்த இலக்குகளை அடைவதற்குள்ள தற்காலத் தடைகளாகக் காணப்படுகின்றன என்று மாவட்ட செயலாளர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போதைய நிலைமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி , அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய புதியதொரு தொடக்கத்துக்கு செல்வதற்குள்ள தடைகளைத் தகர்க்கத் தான் தயார் என்று கூறியுள்ளார்.

ஜனாபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## அரசை ஆதரித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தேர்தலின் பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினாராக பதவியேற்ற டயனா கமகே, பின்னர் அரசுக்கு ஆதரவளித்திருந்தார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக வாக்களித்திருந்து அரசுக்கான ஆதரவை இவர் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தார்.

இதன்படி இவர் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி, ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துள்ளது.

## நாடாளுமன்றத்திலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மட்டத்திலும் புகழ் பெற்றுள்ளது. இளம் தலைமுறையினர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் அடிக்கடி செவிமடுக்கும் பாடலாகவும் மாறியுள்ளது.

அதேவேளை, குறித்த பாடல் மூலம் இலங்கையின் நாமமும் இன்று சர்வதேச மட்டத்தில் உச்சரிக்கப்படுகின்றது. சிங்கள சினிமாத்துறையில் புதியதொரு புரட்சிக்கான அடித்தளத்தையும் இட்டுள்ளது.

இதனால் யொஹானிக்கு அரச விருது வழுங்குவதற்கான ஏற்பாடும் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், 'மெனிக்கே மகே ஹித்தே' என்ற பாடலானது அதியுயர் சபையான இலங்கை நாடாளுமன்றத்திலும் நேற்று ஒலிபரப்பானது.

யொஹானி என்ற இசைக்கலைஞரை நாம் கௌரவப்படுத்த வேண்டும். இதற்காக அவர் பாடிய பாடலை இந்த சபையில் ஒலிபரப்புகின்றேன் என்று குறிப்பிட்டு, தனது தொலைபேசிமூலம் பாடலை போட்டார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார. பாடலும் சிறிது நேரம் ஒலித்தது.

## மேலும் 44 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 229 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 44 பேரில் 19 பெண்களும் 25 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

## பிரபாகரனை மீட்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இறுதிப் போர்க் காலத்தில் பிரபாகரனை அழைத்துச் செல்ல முயற்சித்தார்கள். போரை நிறுத்தவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள். குறிப்பாக பிரபாகரனின் குடும்பத்தினரை அரசிடம் ஒப்படைத்துவிட்டு போரை நிறுத்த முயற்சித்தார்கள். ஆனால், சர்வதேசத்தின் எந்தவிதமான முயற்சிகளுக்கும் இலங்கை அரசு அனுமதிக்கவில்லை.

பிரபாகரனைக் காப்பாற்றும் சர்வதேசத்தின் முயற்சிகளைத் தோற்கடித்துவிட்டு இலங்கை இறுதிப் போரை வெற்றி கொண்டது. இதனாலேயே அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கை மீது கோபத்தில் இருக்கின்றன. இதனாலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# திருக்குமார் நடேசனை விசாரணைக்கு அழைத்தது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு

முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசன் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய பண்டோரா பேப்பர்ஸ் வெளிப்படுத்தல்கள் தொடர்பில் வாக்கு மூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள, அவர் இன்று வெள்ளிக்கிழமை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என அறிய முடிகிறது.

பண்டோரா பேப்பர்ஸ் தொடர்பில் விசாரணை நடத்தி ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்ட நிலையிலேயே, அவர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளார்எனஅந்தஆணைக் குழுவின் அதிகாரி ஒருவர் கூறினார்.

பன்டோரா பேப்பர்ஸில் தமது பெயர் வெளியாகியமை தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்துமாறு முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் ஜனாதிபதி விசாரணைக்கான உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே, விசாரணைகளை ஆரம்பித்து வாக்கு மூலம் பதிவு செய்துகொள்ள தற்போது திருக்குமார் நடேசன் அழைக்கப்பட்டுள்ளார்.

தற்போது நிருபமா ராஜபக்ஷவும், திருக்குமார் நடேசனும் நாட்டில் இல்லை எனத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ள போதும், விசாரணைக்கு அவர் அழைக்கப்பட்டுள்ள பின்னணியில், வாக்கு மூலம் வழங்க அவர் அங்கு ஆஜராவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



முன்னதாக முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் பணக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பிலான தகவல்கள் பன்டோரா பேப்பர்ஸில் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது நாட்டில் பெரும் பேசு பொருளாக மாறியுள்ளது.

நிருபமா ராஜபக்ஷ கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து 2015 ஆம் ஆண்டு வரைநீர்வழங்கல்மற்றும்வடிகாலமைப்பு பிரதி அமைச்சராகக் கடமையாற்றிய நிலையில் அவரது கணவர் திருக்குமார் நடேசன் ஆலோசகராகவும், ஹோட்டல் தொழில்முனைவோராகவும் பணிபுரிந்துள்ளார் எனக் கூறப்பட்டுகிறது.

இவ்வாறான நிலையில், இவர்கள் அமெரிக்கா, பிரித்தானியா, வர்ஜின் தீவுகள் மற்றும் நியூசிலாந்தில் 8 நிறுவனங்களை நிறுவியுள்ளனர் என பன்டோரா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லண்டன் நகரிலும் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரிலும் சொகுசு குடியிருப்பு தொகுதிகளை கொள்வனவு செய்வதற்காக இதில் ஒரு நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துடன் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட சில வெளிநாட்டு நிறுவனங்களுக்கு திருக்குமார் நடேசனுக்கு சொந்தமான மற்றுமொரு நிறுவனம் ஆலோசனை சேவைகளை வழங்கியுள்ளதாகவும் பன்டோரா பேப்பர்ஸ் தெரிவிக்கிறது.

இதனிடையே, சிங்கப்பூரிலுள்ள நிறுவனம் ஒன்றும் இந்தச் செயற்பாடுகளுக்கான பங்களிப்பை வழங்கியுள்ளதாக அந்த ஆவணங்கள் கூறுகின்றன.

2016 ஆம் ஆண்டு கறுப்புப் பணம் சுத்திகரிப்பு தொடர்பில் திருக்குமார் நடேசன் மீது இலங்கையில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்த நிலையிலும் சிங்கப்பூரின் நிறுவனம் ஊடாக அவரது வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கு ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டுள்ளன என அந்த ஆவணத்தில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டில் திருக்குமார் நடேசனின் மொத்த சொத்துக்களின் மதிப்பு 16 கோடி ரூபாவுக்கு அதிகமாகும்.

பிரத்தியேக நிறுவனம் ஊடாக அவர் பெறுமதியான கலை படைப்புக்களை போலி ஆவணம் தயாரித்து வரி ஏய்ப்பு செய்து தன்வசம் வைத்திருக்கிறார் எனவும் பண்டோரா ஆவணம் தெரிவிக்கின்றது.

இந்த விடயங்கள் தொடர்பில் வினவுவதற்கு குறித்த பண்டோரா பேப்பரஸ் ஆவணங்களை வெளிப்படுத்திய சர்வதேச புலனாய்வு ஊடகவியலாளர்கள் ஒன்றியம் திருக்குமார் நடேசன் மற்றும் அவரது மனைவியான முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவை தொடர்புகொள்வதற்கு முயற்சித்தாலும் அவர்கள் பதிலளிப்பதைத் தவிர்த்துக்கொண்டனர் என அந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், திருக்குமார் நடேசன் மற்றும் நிருபமா ராஜபக்ஷவால் நடத்திச்செல்லப்பட்ட இரண்டு நிறுவனங்கள் ஊடாக மேலும் இரண்டு இலங்கையர்களுக்கு அனுகூலம் பெறப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களைவிட மேலும் பல உலகத் தலைவர்கள், பிரபலங்கள் தொடர்பிலும் அந்த ஆவணங்களில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

எனினும் பண்டோரா பேப்பர்ஸ் வெளிப்படுத்தல்களை முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசன் மறுத்துள்ள நிலையில், ஜனாதிபதியிடம் சுயாதீன விசாரணை கோரியுள்ளார்.

இந் நிலையிலேயே இலஞ்ச ஊழல் விசாரணைக்குழுவிடம்விசாரணைகளை நடத்த ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பால் மா தொகுதிகள் இன்று விடுவிக்கப்படும்

கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள பால் மா தொகுதிகளை இன்று விடுவிக்க முடியுமென பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியிடமிருந்து, தாம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வணிக வங்கிகளுக்கு டொலர் ஒதுக்கம் கிடைக்கப் பெறும் என அந்தச் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அதற்கான எழுத்து மூல ஆவணங்கள் கையளிக்கப்பட்டன எனவும் நிதி கிடைக்கும் பட்சத்தில் இன்று பால் மா தொகுதிகளை விடுவிக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் 360 மெற்றிக் தொன் பால் மா தேங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## வேலைநிறுத்தத்தை முன்னெடுக்க மின்சார சபை ஊழியர்கள் தயாராம்

பாரிய வேலை நிறுத்தத்தைத் தொடங்கத் தயாராக உள்ளதாக இலங்கை மின்சார சபையின் கூட்டு தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்படி தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்கும் அரசாங்கத்தின் தீர்மானங்களை மாற்றிக்கொள்ளாவிட்டால் இவ்வாறு பாரிய வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் எச்சரித்துள்ளார்.

இரண்டு மணிநேர வேலைநிறுத்தத்தால் அரசாங்கத்தை மண்டியிட வைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொவிட் காலத்தில் அதிபர், ஆசிரியர்கள், அரசு மாணவர்களின் நலன்கருதி செயற்பட வேண்டும்

### யாழ்.பல்கலை பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.எஸ்.உதயகுமார் கோரிக்கை

தற்போதைய கொவிட் தாக்க நிலையைக் கருத்தில் கொண்டு அதிபர், ஆசிரியர்களும் அரசாங்கமும் மாணவர் நலன்கருதி செயற்பட வேண்டும் என யாழ்.பல்கலைக் கழகத்தின் பொருளியல் துறை முன்னாள் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான எஸ்.எஸ். உதயகுமார் தெரிவித்துள்ளார்.

அன்புக்கும், நட்புக்குமான இளைஞர் வலையமைப்பின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் கி. வசந்தரூபன் அவர்களின் நெறி ப்படுத்தலில் 'நாட்டின் பொருளாதார நிலையும் கொவிட் தாக்கமும்' என்ற தலைப்பின் கீழ் இளைஞர், யுவதிகளுடன் இடம்பெற்ற இலத்திரனியல் ஊடகம் ஊடான கலந்துரையாடலின் போதேஅவர் இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஒரு தொழிற்சங்கப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த முடியாது. குறிப்பாக இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் செய்துள்ளது. அவ்வாறு செய்தது நல்ல விடயமாக இருந்தாலும் செய்த காலம் பொருத்தமானதாக அமையவில்லை. எதிரிக்கு அடிப்பதாக இருந்தாலும் அவன் நோய் வாய்பட்டிருக்கும் போது அடிக்கக்கூடாது. அதேபோல் அதிபர், ஆசிரியர்கள் சம்பள உயர்வு கோரி அரசாங்கத்துக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்துள்ள போதும், இந்த நேரம் அது பிழை என சொல்லலாம். ஆனால் மறுபக்கம் பார்க்கும் போது இவ்வாறான நிலைகளைச் சாதகமாக பயன்படுத்தினால் தான் தீர்வு கிடைக்கும் என்ற நிலையும் தொழிற்சங்கங்களிடம் உள்ளது.



அரசாங்கம் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே பேச்சு ஊடாக இதனைத் தீர்க்க வேண்டும். தற்போதைய நிலையில் சம்பள உயர்வு தர முடியாது. கொவிட் தாக்கம் முடியும் வரை சம்பள உயர்வு கோரி அதிக அழுத்தம் தர வேண்டாம். ஆனால் நாம் தற்போதே சம்பள உயர்வுக்கான அமைச்சரவை அனுமதியைப் பெறுகின்றோம் எனக் கூறி அரசாங்கம் இந்த விடயத்தைக் கையாள முடியும். 2021 ஆம் ஆண்டு பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒரு போராட்டம் செய்த போது அவ்வாறான ஒரு தீர்வே வழங்கப்பட்டது. உடனடியாகத் தரமுடியாது. 5 வருடத்திற்குள் செய்து தரலாம் எனக் கூறி அதனை செய்திருந்தார்கள். அதேபோல் தற்போதும் அதிபர், ஆசிரியர் சம்பளப் பிரச்சினையை செய்ய முடியாது. கொவிட் முடிந்த பின் 2023 இல் அல்லது பொருத்தமான ஒரு காலத்தைக் குறிப்பிட்டு அதில் இருந்து ஆரம்பிக்கின்றோம். இது தான் சம்பளம். சம்பள நிலுவைகளையும் சேர்த்து வழங்குவோம் என ஓர் உறுதிமொழியை அரசாங்கம் வழங்க முடியும்.

அதைவிடுத்து போராட்டத்தை அடக்க முற்பட்டால் தொழிற்சங்க போராட்டம் மேலும் வலுவடையும். மாணவர்கள்நலன்கருதிபோராட்டம் மற்றும் பேச்சு எனக் காலத்தை இழுத்தடிக்காது விரைவாக இரு பகுதியினரும் செய்யமுடியும். சம்பள உயர்வு வழங்கும் திகதியை உரிய வகையில் அறிவித்து இரு பகுதியினரையும் பாதிக்காத வகையில் செயற்பட வேண்டும். இதை வைத்து சில அரசியல்வாதிகளும் அரசியல் செய்ய முற்படுவார்கள். அதிபர், ஆசிரியர்களின் சம்பள உயர்வு கோரிக்கைக்கு தீர்வு வழங்கினால் வேறு தொழிற்சங்கங்களும் சம்பள உயர்வு கோரிப் போராடலாம் என்ற தர்மசங்கட நிலை அரசாங்கத்துக்கும் உள்ளது. எனவே, நிலைமையைப் புரிந்து இரு பகுதியினரும் மாணவர்களின் நலன்களைக் கருதி செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

## முழுமையாகத் தடுப்பூசி பெற்ற பயணிகளுக்கு சுங்க தீர்வை இல்லா கொள்வனவு அனுமதி

கொவிட்–19 இற்கு எதிராக முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்ட பயணிகள் வரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கும்போதே, சுங்கத் தீர்வை இல்லாத கொள்வனவுகளை செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விமான நிலையத்துக்கு வந்திறங்கும் (முழுமையாக தடுப்பூசி பெற்ற) சுகாதார அலுவலகத்தால் தடுப்பூசி சான்றிதழில், அனுமதி பொறிக்கப்பட்ட பயணிகளுக்கு சுங்கத் தீர்வை இல்லாத கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்வனவுகளை பயணிகள் வேறொரு நாளில் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியாவின் வலியுறுத்தல்

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வாக, இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறிவந்த இந்தியா, இப்போது தனது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும், அறுத்து உறுத்தும் உரைக்கத் தொடங்கியிருப்பது கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, இலங்கையில் தாம் உரையாடிய பல இடங்களில் அதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி, வற்புறுத்தலாக வெளியிட்டுச் சென்றிருகின்றார்.

'அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.' – என்பதுதான் அந்த நிலைப்பாடு.

மேலோட்டமாகப் பார்த்தால் ஏதோ இந்தியாவின் வழமையான பல்லவி போல இது தோற்றினாலும், இப்போது இந்தியா அதனை அழுத்திச் சொல்லும் விவகாரத்தில் அதற்குள் ஆழமான அர்த்தங்கள் இருப்பது நோக்கற்பட வேண்டும்.

இந்த அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ஒட்டி பல விடயங்கள் கூறப்பட்டு வந்துள்ளன.

யுத்த காலத்திலும், யுத்தத்திற்குப் பின்னரான சமயத்திலும் கூட இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 'பதின்மூன்றுக்கு அப்பால் செல்வது', 'பதின்மூன்று பிளஸ்' பற்றி எல்லாம் இலங்கை அரசுத் தலைவர்களே பல வாக்குறுதிகளை எல்லாம் தந்துள்ளனர்.

அதைப் பற்றி எல்லாம் இப்போது இந்தியா கேட்பதில்லை. வலியுறுத்துவதில்லை.

தன்னோடு இலங்கை செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் – ஒப்பந்த வாசகங்களை நடைமுறைப்படுத்துவதற்காக – கொண்டு வரப்பட்டதே அரசமைப்பின் 13ஆவது திருத்தம், அதனை முழு அளவில் நடைமுறைப்படுத்துங்கள் என்பதைத்தான் இந்தியா வலியுறுத்துகின்றது.

இலங்கை – இந்திய ஒப்பந்த வாசகப்படி தமிழ்ப்போராளிகளைக் கட்டுப்படுத்தும் செயலை இந்தியா திருப்திகரமாக நிறைவேற்றவில்லை, ஆகவே மறுபுறத்தில் இலங்கையும் தனது கடப்பாட்டை நிறைவு செய்யத் தேவையில்லை என்று இலங்கைத் தரப்பில் நியாயமும் கற்பிக்கப்பட்டு வந்தது.

ஆனால், 2009 மேயில் யுத்தத்தின் முடிவுடன் நிலைமை மாறிவிட்டது. இந்தியாவின் முழுப்பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு மூலமே யுத்தத்தில் வெற்றியீட்ட முடிந்தது என்பதை இலங்கையின் அரசுத் தலைவர்களே பகிரங்கமாகச் சிலாகித்தும் கூறியுள்ளனர்.

அப்படிப் பார்த்தால் ஒப்பந்த வாசகப்படி இந்தியா தன் பங்களிப்பைச் செய்து விட்டது என்பதே அர்த்தம். ஆக இலங்கை தான் தன் பக்கக் கடப்பாட்டை நிறைவேற்றாமல் இழுத்தடித்து வருகின்றது என்பதுதான் நிலைமை.

இந்தப் பின்புலத்தில்தான் "13ஆவது திருத்தம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்" – என்று இந்தியா இப்போது திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறும் விடயம் நோக்கற்பட வேண்டும்.

இந்த வலியுறுத்தலில் இரண்டு முக்கிய அம்சங்கள் ஆழமாகப் பொதிந்துள்ளன.

ஒன்று – 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவது என்றால் அதில் உள்ள மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் என்பன பிரித்து வழங்கப்பட வேண்டும்.

அடுத்தது – 13ஆவது திருத்தம் வந்தபோது அதில் இருந்த அதிகாரப் பரவலாக்கல் அனைத்தும் – பிற்காலத்தில் நீர்த்துப்போகச் செய்யப்பட்டவை கூட – மீளவும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்ற விவகாரமும் இதற்குள் வலியுறுத்தப்படுவது கவனிக்கப்பட வேண்டும்.

13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலில் இந்தியா இப்போது தீவிரமாக இருப்பதாகத் தெரிகின்றது. நிச்சயம் இது ராஜபக்ஷக்களுக்கு எரிச்சலைத் தரும் என்பது உறுதி.

## அநுராதபுரத்திலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை யாழ்ப்பாணத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுங்கள்!

### சாணக்கியன் சபையில் வலியுறுத்து



அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

'அண்மையில் அச்சுறுத்தப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நாங்கள் சந்தித்து பேசியிருந்தோம்.

நாங்கள் அவர்களை சந்தித்து பேசும் போது, அவர்கள் அமர்வதற்குக் கதிரைகள் கூட வழங்கப்படவில்லை. எனினும் நாங்கள் வலியுறுத்தி அவர்கள் அமர்ந்து பேச கதிரைகளை பெற்றுக்கொடுத்தோம்.

அவர்களை நாங்கள் சந்தித்து பேசும் போது, சிறைச்சாலை ஊழியர்களும் அருகில் இருந்தமையால் பல விடயங்களை பேச முடியவில்லை. எனினும் அவர்கள் தங்களை யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு எங்களிடம் தெரிவித்தனர்.

ஆனால் தன்னிடம் அப்படி அவர்கள் கூறவில்லை என நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும் அவர்கள் எங்களிடம் அதனைத் தெரிவித்தார்கள். அதேபோன்று நடைபெற்ற சம்பவத்துக்கு நீதிஅமைச்சர் மன்னிப்புக் கோரியமையை நாங்கள் வரவேற்கின்றோம்.

இதேவேளை, அண்மையில் சில அரசியல் கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். முகப்புத்தகத்தில் பதிவிட்ட குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரின் விடுதலைக்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வகையில் நாங்கள் தொடர்ந்தும் பாடுபடுவோம்.' – எனக் குறிப்பிட்டார்.

## சிறையில் தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக தமிழ் அரசியல் கைதிகள் என்னிடம் கூறவில்லை!

### அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார்



அநுராதபுரம் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவிக்கவில்லை, மாறாக அவர்களின் உறவினர்களைச் சந்திக்க தம்மை யாழ்ப்பாணம் சிறைக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர் எனவும், பாதுகாப்புத் தரப்புடன் கலந்துரையாடி இது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் நீதி அமைச்சர் அலி சப்ரி சபையில் தெரிவித்தார்.

அரச பாதுகாப்பில் அவர்கள் உள்ளனர், ஆகவே அவர்களுக்கு ஏதேனும் நடந்தால் அரசாங்கமாக நாம் சகலரும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில்கடந்தபுதன்கிழமைசிறைக் கைதிகள் மற்றும் அவர்களின் பாதுகாப்பு, நலன்கள் தொடர்பாக எதிர்க்கட்சியினர் கொண்டு வந்திருந்த சபை ஒத்திவைப்பு பிரேரணையில் கருத்துக்களை முன்வைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் எம்.பி., அநுராதபுரம் சிறைக் கைதிகள் தொடர்பாகக் கேள்வி எழுப்பியிருந்தார், அநுராதபுரம் சிறையில் உள்ள தமிழ் கைதிகளுக்கு பாதுகாப்பு வழங்கவும், சட்டத்தரணிகளுக்கு அவர்களை சந்திக்க வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும் எனவும், சிறைக் கைதிகளை யாழ்ப்பாணம் சிறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற காரணிகளை வலியுறுத்தினார்.

இதற்கு பதில் தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி –

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் கைதிகளுக்கு ஏற்பட்ட குற்றம் தொடர்பில் சபையில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன, இராஜாங்க அமைச்சர் மூலமாக இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை நடத்தி உரிய அதிகாரிகளுக்கு வழங்குவதே எமது அமைச்சின் மூலமாக முன்னெடுக்கும் வேலைத்திட்டமாகும்.

குற்றம் தொடர்பில் பொலிஸார் வேறு, விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இன்றும் என்னுடன் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார். ஆகவே, இந்த விடயத்தில் நான் தலையிட நினைக்கவில்லை. அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று மேற்படி கைதிகளுடன் நான் கலந்துரையாடினேன். அதன்போது தாம் யாழ்ப்பாணத்துக்குச் செல்ல வேண்டும் என அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

ஆனால் அவர்களின் கிராமங்கள் அண்மையில் உள்ள காரணத்தால் நாங்கள் அங்கு செல்ல விரும்புகின்றோம், எமது உறவினர்களுடன் கதைக்க அவர்களை சந்திக்க எமக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தையே அவர்கள் என்னிடம் கூறினர். மாறாக உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக அவர்கள் என்னிடம் கூறவில்லை. நான் மீண்டும் மீண்டும் தமிழ் மொழியில் அவர்களுடன் கலந்துரையாடினேன். எனினும் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக அவர்கள் என்னிடம் கூறவில்லை. எவ்வாறு இருப்பினும் அவர்களின் பாதுகாப்பை முழுமையாக உறுதிப்படுத்த நாம் தயாராக உள்ளோம்.

உயர் நீதிமன்றமும் அதனையே சுட்டிக்காட்டியுள்ளது. அரச பாதுகாப்பில் அவர்கள் உள்ளனர், ஆகவே, அவர்களுக்கு ஏதேனும் நடந்தால் அரசாங்கமாக நாம் சகலரும் பொறுப்புக்கூற வேண்டும். எவ்வாறு இருப்பினும் யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதென்றால் பாதுகாப்புத் தரப்புடன் கலந்துரையாட வேண்டும், அவர்களைக் கொழும்பு அல்லது தும்பர சிறைக்கு மாற்ற விருப்பம் கேட்டேன், ஆனால் அவர்கள் அதற்கு விரும்பவில்லை. எவ்வாறு இருப்பினும் மீண்டும் இவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவேன். – என்றார்.

## சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

2020 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு, பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், பெறுபேறு மீளாய்வுக்காக ஒன்லைன் ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

**எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு**

**அங்கம் - 99**

**ந.வித்தியாதரன்**

சிவநாயகம் ஐயா தொடர்பில் நண்பர் அமரர் ஷண் மூலம் பெற்றுக் கொண்ட தகவல்களையும் சேர்த்து இன்றைய அத்தியாயத்தைத் தருகிறேன்.

**ஈடாக ஒருவர் இல்லை - அவர்க்கு**
**இணை சொல்ல அரசர் இல்லை (ஈடாக)**

**ஏடெங்கும் தமிழ் வாசம்**
**எழுந்தெங்கும் கலை வாடை**

**நாடெங்கும் தமிழ் கொண்டு**
**நடை போடும் எழுத்தாளர்களுக்கு (ஈடாக)**

**சரியென்று கண்டாலே முடி சூட்டுவார் - அது**
**தவறென்று கண்டாலோ படை கூட்டுவார்**
**அறியாத மாந்தர்க்கும் அறிவூட்டுவார் - தமிழ்**
**அன்னைக்கு முத்தார நகை சூட்டுவார் (ஈடாக)**

**உடலுக்குப் பாலூட்டும் தாய் போலவே**
**தமிழ் உயிருக்குப் பாலூட்டும் எழுத்தாளரே**
**கடலாழம் அவர் கொண்ட கருத்தாழமே**
**எந்தக் காலங்கள் மறைந்தாலும் உயிர் வாழுமே (ஈடாக)**

- பத்திரிகையாளர்களைப் பற்றி கவிஞர் கண்ணதாசனால் எழுதப்பட்ட மேற்படி பாடல் வரிகள் இலங்கைப் பத்திரிகைத்துறையில் அமரர் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவுக்காகவே எழுதப்பட்டது போன்று வெகு பொருத்தமாகவே அமைந்திருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைப் பத்திரிகையியலில் எல்லாத் துறைகளையும் தொட்டவர் என்று சிலாகிக்குமளவுக்கு ஜனரஞ்சகமாகத் திகழ்ந்தவர்தான் அமரர் எஸ்.டி. சிவநாயகம் ஐயா.

அரசியலா, ஆராய்ச்சியா, இலக்கியமா, இயல் - இசை - நாடகமா, இந்து - முஸ்லிம் - கிறிஸ்தவ - பௌத்த



மதங்களா, கதையா, கவிதையா, சோதிடமா, வைத்தியமா, சினிமாவா, டெலிவிஷனா, வானொலியா, படப்பிடிப்பா, டெவலப்பிங்கா, கேள்விக்குப் பதில்களா, வெளிநாட்டுப் பயணமா, கணனியா என்று எல்லாத் துறை சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதும் ஆற்றல் மிக்கவரான எஸ்.டி. சிவநாயகம் பல்துறை அவதானங்களையும் கொண்டவர்.

கதை, கட்டுரை, கவிதை, இலக்கியம், நாடகம், சினிமா, தொலைக்காட்சி விமர்சனங்கள், வினா - விடை, பயணக் கட்டுரைகள், சோதிடம், அரசியல் கட்டுரைகள், விமர்சனங்கள், ஆன்மீகம், வைத்திய ஆலோசனைகள் என்று எல்லாத் துறைசார்ந்த அனுபவங்களையும் ஆற்றல்களையும் அறிந்த பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்தவர்தான் அவர் என்று சொன்னாலும் அது மிகையாகாது.

இது வெறும் புகழ்ச்சியல்ல என்பதை இவர் பணியாற்றிய வீரகேசரி, தினகரன், சுதந்திரன், தினபதி, சிந்தாமணி, சூடாமணி பத்திரிகைகளைப் படித்த அந்த நாள் ஞாபக வாசகர்கள் அறிவர்.

சுவடிக் காப்பகம் சென்று பார்த்தால் இன்றைய இளைய தலைமுறையினருக்கும் இது புரியும். ஊடகவியலாளன் என்பவன் உருவாக்கப்படுபவன் அல்லன் உருவாகிறான் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர் தான் அவர்.

கவிதை ஆக்கத் துறையில் மிகவும் கைதேர்ந்தவர். ஒரு கவிதை பார்ப்போம்.

**உயிரிழந்த பிணமதனை உடைமையாலும்**
**உவப்பில்லாக் கடதாசிப் பூவினாலும்**




**இயன்றளவும் மூடி இன்புற்றாலும் - இறந்த பிணம்**
**இறந்ததுதான் உயிர்ப்பங்கில்லை!**

**பயின்றதுவோ பல நூறு நூலானாலும்**
**பாவிலக்கணம் தேடிப்படித்திட்டாலும்**
**முயன்றெழுதும் கவிதை வெறும் - சொற்கூட்டன்றி**
**முழங்கு பிறவிக் கவியின் முதிர் வாக்காமோ?**

**காரிகையோ கற்றறியான் கவிதை பாடும்**
**கலையினிலே வியன் பெற்றான் என்றாலீது**
**பாரினிலே புதுமையென்பார் கவிஞன் பட்டப்**
**படிப்பதனைப் படிப்பதனால் ஆவதில்லை!**

**பேரினிலே ஒன்றில்லை பிறப்பிலேதான்**
**பிறக்கின்றான் கவிஞனென்பதோர் பேருண்மை**
**ஆரினிமேல் கவிஞனென்ற ஐயம் வேண்டாம் - அவன்**
**பாட்டில் உயிருண்டாவென்று மட்டும் பாரீர்!**

'யார் கவிஞன்?' என்ற தலைப்பில் 'தியாகி' என்ற புனைப்பெயரில் எஸ்.டி.சிவநாயகம் ஐயா எழுதிய மேற்படி கவிதை வரிகள் 1946ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி அவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'ஐக்கிய தீபம்' பத்திரிகையில் பிரசுரமானது. அப்போது அவருக்கு வயது இருபத்தினான்குதான்.

1946ஆம் ஆண்டுப் பத்திரிகையுலகப் பிரவேசத்துக்கு முன்னதாகப் பள்ளிப் பருவத்திலேயே பாடசாலைப் பத்திரிகையொன்றின் ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவுக்கு உண்டு.

ஐக்கிய தீபம் பத்திரிகைக்கு அடுத்து 1947ஆம் ஆண்டு தனது சொந்தப் பத்திரிகையான 'உதயம்' பத்திரிகைக்கு ஆசிரியரானார் சிவநாயகம் ஐயா. இப்பத்திரிகையின் ஞாபகமாகத்தான் பின்னாளில் தன் மூத்த மகனுக்கு உதயநாயகன் என்று பெயர் சூட்டினார் போலும்.

தியாகி, அரசகேசரி, நவரசகேசரி, குயுக்தியார், திரிஞானி என்று பல புனைப் பெயர்களுக்குச் சொந்தக்காரரான எஸ்.டி.எஸ். எழுதிய ஆக்கங்கள் ஏராளம். அத்தனையும் வாசகர்களுக்குத் தாராளம்.

தினபதி, சிந்தாமணியில் எழுதியவர் பெயரின்றி பல்லாயிரம் கவிதைகள் வெளியாகியுள்ளன. அவை எல்லாமே சிவநாயகம் ஐயாவினுடைய படைப்புகள்தாம். தினபதி, சிந்தாமணி பத்திரிகையில் நிகழ்வுகளை ஒட்டி பிரசுரமாகும் கவிதைகள் அவரின் கைவண்ணத்தில் உருவாகியவையாகவே இருக்கும். வருடப்பிறப்பு, தைப் பொங்கல், தீபாவளி போன்ற கொண்டாட்டங்களை ஒட்டி அன்றைய தினங்களில் வெளியாகும் பத்திரிகையின் முன்பக்கத்தில் அல்லது சிந்தாமணி முன்பக்கத்தில் மங்கையரின் முகப்படங்களுடன் வருகின்ற கவிதைகள் பெரும்பாலும் அவருடையவையாகத்தான் இருக்கும். மாதிரிக்கு மூன்று கவிதைகளைத் தருகிறேன். முகவரியின்றி இவர் எழுதிய முகப்புப் படக் கவிதைகள் மூன்றும், மூன்று பண்டிகைகளுக்காகவே முகிழ்த்தவை: ஒன்று - பொங்கலுக்கு. மற்றையது - புத்தாண்டுக்கு. மூன்றாவது - தீபாவளிக்கு.

**கங்குல் கிழித்தே கிழக்கில் கதிரவன் உதித்தான்**
**எங்கும் ஒளிவீசிட தைத் திங்களும் புலர்ந்தாள்**
**பொங்கல் தரும் பூரிப்பில் பொலிவுகள் சொலிக்க**
**மங்கையிவள் மதிமுகத்தில் பொங்குநகை தந்தாள்!**

**குத்து விளக்கேற்றி குளிர்கவியும் நள்ளிரவில்**
**புத்தாண்டை வரவேற்கும் பொன்முறுவற் பூங் கோதாய்**
**இத்தரையில் போரொழிந்து இன்பமுடன் சமாதானம்**
**நித்தியமும் நிலைக்க வரம் நிமலனிடம் கேளாயோ?**

**செந்தாமரை முகத்தில் சிரிப்பின் ஒளிபடர**
**நந்தா விளக்கேற்றும் நங்கை இவள் நளினமுடன்**
**வந்தாளே நாளைவரும் தீபத் திருநாளை**
**முந்திநின்று வரவேற்க முழுஉலகும் களித்திட வே!**

- இப்படி இவரைப் பற்றி எழுதிட இன்னும் எத்தனையோ உண்டு;அத்தனையும் கற்கண்டு.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் வெளிவந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி வெளியீடான 'தமிழரசு மலர்' ஒரு காத்திரமான படைப்பு. அந்தப் பணியை மெச்சத்தக்க வகையில் மேற்கொண்டவர் சிவநாயகம் ஐயா. அதில் தமிழரசு வாலிப முன்னணிக் கீதத்தையும் இணைத்தார்.

அந்நேரத்தில் அவர் பயன்படுத்திய புனை பெயரான 'தியாகி' என்ற பெயரிலேயே அது பிரசுரமாகியது.

தமிழரசு வாலிப முன்னணி கூட (இப்போது தமிழரசு இளைஞரணி கூட) அப்படி தம் அமைப்புக்கு ஒரு கீதம் இருக்கின்றமையை அறிவார்களோ தெரியவில்லை. அதனால் அதை இங்கு தருகிறேன்.

## தமிழரசு வாலிப முன்னணிக் கீதம்

– தியாகி –

**1. அமுதத் தமிழர் நாட்டிலே**
**தமிழினாட்சி நாட்டவே**
**இமய மன்ன வீரர்காள்**
**திரண்டு வாரீர் ஒட்டமாய் (அமுத)**

**2. வீறு பெற்ற தமிழகத்தின்**
**வீர இளைஞர் கூடினோம்**
**கூறு நூறு செய்யினும்**
**குலையுமோ நம் லட்சியம் (அமுத)**

**3.தந்தை வாழ்ந்த நாட்டிலே நம்**
**தாயும் வாழ்ந்த நாட்டிலே**
**சொந்த மற்ற பிரஜையாய்**
**நிந்தை யுற்று வாழ்வதா? (அமுத)**

**4. ஆதி உலகத் தாய் மொழி**
**அமுத மனைய தமிழ் மொழி**
**நீதியற்ற சூழ்ச்சியால்**
**மானமற்று வாழ்வதா? (அமுத)**

**5. வடக்கும் தெற்கும் பரந்திட**
**வளரிலங்கை ஆண்ட நாம்**
**இடர்ப்பட்டயலார் காலில்**
**ஈனமுற்று வீழ்வதா? (அமுத)**

**6. எங்கள் உரிமை நாட்டிடல்**
**இராச நீதியற்றதா**
**எங்கள் நாட்டில் எங்கள் அரசு**
**நாங்கள் நாட்டி யாளுவோம் (அமுத)**

**7. ஈழம் வாழும் ஈரினம்**
**இணங்கி வாழ ஏற்றது**
**நாளும் இன்பம் தருவது**
**நல்லதோர் சமஷ்டியே (அமுத)**

**8. சூழும் அடிமை போக்கவே**
**சொந்த ஆட்சி பூக்கவே**
**சம வுடைமை ஆக்குவோம்**
**சுதந்தரத்தை நாட்டுவோம் (அமுத)**

நாளை இத்தொடரின் நூறாவது அத்தியாயம். அத்தோடு இத்தொடரை இம்மட்டில் முடிப்பேன்.

என்னினும் நம் வழிகாட்டியின் தகுதி உரைக்கும் ஆக்கங்களை வேறு வடிவங்களில் அவ்வப்போது தருவேன்.

(வளரும்....)



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 154

**400. உங்களுடைய தனிப்பட்ட அனுபவங்களோ, அபிப்பிராயங்களோ எதுவாக இருந்தன?**

எனது சொந்த அனுபவங்களின் மூலமே, அவை (அக்கலவரங்கள்) திட்டமிடப்பட்டவை என்பதை தெளிவாக உணர்ந்திருந்தேன். ஆனால், அந்த அனுபவங்கள் எல்லாம் சுயபுராணமாக வேண்டியதில்லை.

கலவரங்கள் தொடங்கும் சில மாதங்களுக்கு முன்னிருந்தே இங்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தினை (TRRO) முடக்கும் நோக்கில் காரியங்கள் நடந்தன. நானும் பொருளாளர் வி.எஸ்.துரைராஜா மற்றும் மண்டூர் மகேந்திரன் போன்றோரும், காந்தியத்தின் டாக்டர் ராஜசுந்தரம் மற்றும் டேவிட்ஐயா போன்றோரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் நான்காம் மாடி விசாரணைகளில் அலைந்து கொண்டிருந்தோம். நாங்களும் எங்களுக்கிருந்த தொடர்புகளினால் அவற்றைத் தள்ளிப்போட்டுக் கொண்டிருந்ததால் பாதுகாப்பு அமைச்சின் பணிப்பின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்படவில்லை. அப்படியாயிருந்தால் வெலிக்கடை சிறையில் நடந்தவற்றில் நாமும் அகப்பட்டிருப்போம்.



1983 ஜூலை கலவரக் காட்சிகள்

ஜே.ஆரின் நோக்கம் 1977 இல் நடந்ததைப்போன்று இல்லாமல், அவருடைய திட்டத்தில் வரப்போகின்ற அகதிகள் அரசாங்கத் தயவிலேயே கவனிக்கப்பட வேண்டும், தங்கியிருக்க வேண்டும் என்பதே.


அந்தத் திட்டத்தின் ஒரு பக்கத்தினை எனது சகோதரர்களைத் தேடி நான் சம்பவங்கள் நடந்த இரண்டாம் நாள் இரத்மலானையிலிருந்த அகதி முகாம்களுக்குப் போனபோது உணர்ந்தேன்.

அங்கு அவர்களைத் தேடியபோது நான் சந்தித்த இருவரை அவ்விடத்தில் எதிர்பார்க்கவில்லை. ஒருவர் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி. சட்டத்தரணியாக எனக்கு நன்கு அறிமுகமானவர். இரத்மலானையின் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதும் நினைவு. அவர் தனது உதவியாளர்களோடு முகாமைப் பொறுப்பெடுத்து நடத்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அடுத்தவர் சர்வோதய இயக்கத்தின் தலைவர் ஏ.ரி. ஆரியரத்தினா. அரசு சாரா நிறுவனங்களில் இளவயதிலிருந்தே ஈடுபட்ட காலங்களிலிருந்து சில பயிற்சிப் பட்டறைகளில் அவரோடு இணைந்து செயற்பட்டிருந்தேன்.

அவர்கள் சொன்னவை எனக்கு வியப்பாகவும், திகைப்பாகவும் இருந்தது.

**401. அப்படி என்ன சொன்னார்கள்?**

ஏ.ரி.ஆரியரத்தினாவின் சர்வோதய இயக்கம், காந்தியடிகளினதும், வினோபாவேயின் கொள்கைகளுக்கு மதிப்பு தருபவர்கள். அவர்களின் அடிப்படையிலேயே அவர்களது சமூக சேவை அமைந்தது. அவர் அந்தப்பகுதியிலிருந்த சர்வோதய சங்கங்களின் பல அங்கத்தினரோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக



வந்திருந்தார். முகாமிலிருந்த மக்கள் தாங்கள் தருவதை ஏற்கத் தயங்குகிறார்களென்றும் பின்வாங்குகின்றனர் எனவும் என்னை அவர்களிடையே பேசி, நம்பிக்கை கொண்டு தங்களோடு சேர்ந்து உதவிசெய்யச் சொல்லுமாறு கேட்டார்.

ஆரியரத்தினா உடனடியாக அவ்வளவு பேருடன் வந்தது எனக்கு விசித்திரமாகப் பட்டது. ஏதோ எதிர்பார்த்து இருந்தது நடந்தவுடன் காரியத்திற்கு இறங்கிய மாதிரித் தோன்றியது. அவருடன் பேச்சுக் கொடுத்ததில் தங்களது அங்கத்தினர் பல பகுதிகளில் சேவையிலிருந்தபோது அங்கு அடிமட்டங்களிலிருந்து அறிந்து கொண்டதிலும் உணர்ந்து கொண்டதிலும் அரசியல் போக்குகளால் இன்னுமொரு கலவரம் உருவாக்கப்படும் என கணித்ததால் தாங்கள் தயாராக இருந்தனர் என்று கூறினார். 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட உணர்ச்சியில் சிங்கள மக்கள் தங்களது ஆத்திரத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனால் அதே மக்களே அடித்தவர்களைப் பாதுகாக்க உதவிசெய்ய வருவார்கள். இது அவர்களது இயல்பு. பாரம்பரியம், புத்த தர்மத்தில், காருண்யத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள், சிங்கள மக்கள். இது உணர்ச்சியில் ஏற்பட்டது என்றார். அந்த நேரத்தில் அந்த இடத்தில், நட்பிருந்தாலும் இவை நடந்த அரசியலுக்குள் போகவில்லை. ஆனால் அடிமட்டங்களில், இவை தூண்டப்பட்டன,தூண்டுவதற்கான ஏற்பாடுகள் இருந்தன எனப் புரிந்தது.

மக்கள் லலித் அத்துலத்முதலியின் உதவிக் கரங்களைக் கைப்பற்றத் தயங்கிக் கொண்டிருந்தார்கள். அவர் வந்திருந்தால் தங்களுக்கு வேறெதும் அங்கு நடக்குமோ என அஞ்சினார்கள். அவரும் அங்கிருந்தவர்களில் சிலரை முகாமை தங்களோடு சேர்ந்து நடத்த அறிவுறுத்துமாறும், இன்னும் இரண்டொரு நாள்களில் இந்தவெறி தணிந்துவிடும், அதன்பின் அவர்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்லலாம் என்றார். நடந்தவற்றினால் அவர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கே செல்ல விரும்புகிறார்கள் எனவும், அவர்கள் இங்கிருந்து பாதுகாப்பாகக் கொழும்பு முகாமுக்கு அனுப்ப ஒத்துழைப்பு கொடுத்தால் அவர்கள் அங்கலாய்ப்பு இன்றி இருப்பார்கள் என அவர்கள் கூறியவற்றை சொன்னேன். அவரோ இந்தவெறி இப்பொழுது தணிந்துவிடும், இன்னும் சில மணித்தியாலங்களில் அந்தச் செய்திகள் வந்தவுடன் எல்லாமே அடங்கிப்போகும், ஆகவே இவர்கள் மேலும் ஏதும் தங்களுக்கு நடக்கலாம் என அஞ்சத் தேவையில்லை என்றார். வியப்பில் என்ன என்று கேட்டபோது வெலிக்கடையில் புலிகள், குட்டிமணி, தங்கதுரை போன்று சிங்கள மக்கள் வெறுத்த தீவிரவாதிகள் கொல்லப்பட்டு விட்டார்கள். அந்த விவரங்கள் இன்னும் சில மணித்தியாலங்களின் பின் வெளிவரும். அவர்கள் எல்லோரும் அழிக்கப்பட்டதில் சிங்கள உணர்ச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்றும் (''you should make them understand this is a rupture out of a stress the Sinhalese having been suffering totally out of the actions of the separatists'') அதனை பாதிக்கப்பட்டவர்களுக்கு சொல்லக் கூடிய மனநிலை எனக்கு வரவில்லை.

நான், எனது சகோதரர்களை என்னோடு கூட்டிப் போகிறேன் என , ஏன் நாங்கள் பார்ப்போம் என்றார். ஆனால் நானோ அவர்கள் என்னோடு இருப்பதில், ஒரு பாதுகாப்பை உணர்வர்கள் என அழைத்துச் சென்றேன்.

**402. தலைமைப் பதவியை நிலைநாட்டுவதுதான் பிரபாகரனின் நோக்கமென்றால் இதனை ஏன் அந்த நேரத்தில் செய்தார்?**

அது எங்களுக்கும் குழப்பமாயிருந்தது. அதை அறிந்து கொள்ள வேண்டிய தேவையும் இருந்தது. பொதுவாக 4 அல்லது 5 பல்கலைக்கழக மாணவிகள் திருநெல்வேலியிலிருந்து கடத்தப்பட்டு, கற்பழிக்கப்பட்டு, கொல்லப்பட்டு, அவர்களது உடம்புகள் யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் வீசப்பட்டிருந்தன என்றே செய்திகள் வந்திருந்தன. அதுவே இராணுவம் மீதான தாக்குதலுக்குக் காரணம் என்று கூறப்பட்டது. இவையே எம்மால் தமிழர் தகவல் நிலையத்துக்கு சென்னையூடாகவும் லண்டனுக்கும் அறிவிக்கப்பட்டது. அவர்கள், அந்த செய்தியின் உண்மைத்தன்மையை ஆதாரப்படுத்துமாறு மனித உரிமைகள் அமைப்புகள் கேட்கின்றன எனவும் அறிந்து சொல்லவும் கேட்டார்கள்.

இதனை விசாரித்துச் சென்றபோது செய்திகள் திரிவடைந்து, அது திருநெல்வேலியில் பல்கலைக்கழக மாணவிகளல்ல, கோப்பாய் ஆசிரிய கல்லூரியினர் என்றும், பின்னால் அப்படியல்ல பலாலி ஆசிரிய கல்லூரி என்றும் இடங்கள் மாறின. உடல்களைக் கண்டவர்கள் எவரும் நேரடியான வாக்குமூலம் தரவில்லை. பின்னர் அதனை இராணுவத்தினரே தங்கள் டிரக் வண்டியில் எடுத்துச் சென்றனர் என வந்தது. அப்படி எல்லோரும் சாகவில்லை, அதில் ஒரு மாணவி தற்கொலை செய்துகொண்டாள் என்றும் தகவல். ஆனால் அதுவும் ஆதாரப்படுத்தப்படவில்லை.



இடையில் விடுதலைக் குழுக்களிலிருந்தே அப்படியான சம்பவத்திற்காக இத்தாக்குதல் செய்யப்படவில்லை, இது பிரபாகரன் தனது நம்பிக்கையான தோழன் சீலனைக் கொன்ற இராணுவத்தினரைப் பழிவாங்க, தேடி அவர்கள் அந்த நேரம் அவ்விடத்தால் போவார்கள் என ஒட்டுக் கேட்டறிந்து கொண்டு செய்யப்பட்டது என்று தகவல்கள் நம்பிக்கையாக வந்தன. ஆகவே பிரபாகரனிடம் நேரடியாக அதனை கேட்கலாம் என்று சந்திப்பை ஏற்படுத்திவிட்டு யாழ்ப்பாணம் சென்றேன்.

(வளரும்.....)



# 26 கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

- வே.வரதசுந்தரம் -



1970கள் என்று ஞாபகம். கொழும்பில் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் பகுதிநேர நிருபராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். ஒருநாள் மதிய வேளை, எங்கள் செய்தி ஆசிரியர் திரு.கானமயில் நாதன் என்னிடம் கூறினார். “மாஸ்டர்! பேருந்து நிலையப் பகுதியில் ஏதோஅசம்பாவிதமாம். அங்கு சென்று நிலைமையை அவதானித்து வருவீர்களா?”

ஆம் என்று தலையசைத்துவிட்டு, அவ்விடத்துக்கு நடந்தே சென்றேன். அங்கு போதி மரத்தடிக்கு சென்ற மாத்திரத்தே ஓரதிர்ச்சி காத்திருந்தது. சற்று தூரத்தில் தமிழர் கடைகள் தாக்கப்படுவதாக வதந்தி. வாகனங்கள் அங்கும் இங்குமாக பறந்துகொண்டிருந்தன. பதற்ற சூழ்நிலை எங்கும் காணப்பட்டது.

அச்சமடைந்த நான் இப்போதென்ன செய்யலாம் என்று ஏங்கியவாறு எங்கள் குலதெய்வமாம் திருகோணமலை பத்திரகாளி அம்பாளை நினைத்தேன். ‘காளி ஆச்சி!’ என்று எந்தன்நா குழறியது. என்ன அதிசயம்! வேகமாக விரைந்து வந்த கறுப்புநிற மொரிஸ் மைனர் டாக்ஸி திடீரென என் முன்னால் பெரிய இரைச்சலுடன் நின்றது. பதற்றம் அடைந்தேன்.

அவ்வாகனத்தின் சாரதி சிங்களமொழியில் உரையாட என் பதற்றம் பன்மடங்கானது. ‘மாத்தையா! எங்கே செல்லவேண்டும்?’ எனக் கேட்க நானும் சிங்களமொழியில் ‘தினபதி காரியாலயம்’ என்றேன். அவரோ ‘காரியாலயமும் மண்ணாங்கட்டியும். ஊர் பற்றி எரிகிறது. காரியாலயமா போகப்போறீர். உங்களைப் பார்க்க தமிழ் மாத்தையாபோல் தெரிகிறது. வாகனத்தில் ஏறும். வீட்டில் கொண்டு போய் இறக்கி விடுகிறேன்’ என்றார். நானும் காரில் ஏறிக்கொண்டேன். என் வீட்டு முகவரியைக் கூறினேன். அவர் தொடர்ந்து கூறினார். ‘நிலைமை சரியில்லை. வீட்டில் இறக்கிவிடுகிறேன். இரண்டு, மூன்று நாள்கள் எங்கும் வெளியே செல்ல வேண்டாம். ‘இவ்வாறு நெருக்கமான நண்பன் போன்று உரிமையுடன் வலியுறுத்தினார். என் வீட்டு வாயிலில் வாகனத்தை நிறுத்த, நான் இறங்கி டாக்ஸி கட்டணம் எவ்வளவு என்று வினவ, கட்டணம் எதுவும் வேண்டாம் என்றார். கார் பறந்து சென்றது.


இந்த காலத்தில் இப்படியும் ஒருவரா? இவ்வாறான சம்பவங்களைச் சாதகமாக்கிக் கட்டணத்தைப் பன்மடங்காக்கி பணம் சம்பாதிப்போர் மலிந்த இக்காலத்தில் இப்படியும் ஒருவரா! ஒருபுறம் தீவிரவாதிகள் இவ்வாறு அட்டகாசம் பண்ண மறுபுறம் நான்முன்பின் அறிந்திராத ஒரு சிங்கள சாதாரணர் எவ்வித எதிர்பார்ப்புமின்றி இவ்வாறு நல்ல காரியம் செய்கிறாரே! மனிதநேயம் செத்துவிடவில்லை! இன்றும் வாழ்கின்றது என்று தெளிந்தேன்.

வீடு நுழைந்ததும், நான் இச்சம்பவத்தை வியப்புடன் கூறியதும் என் பெரிய தாயார் சிவாகாமியம்மாவும், சின்ன மாமா நடேசபிள்ளையும் இது காளி ஆச்சி கருணை என்றனர். சின்னமாமா ஏதோ அலுவல் காரணமாக கொழும்பு வந்தவர் அப்போது வீட்டில் இருந்தார்.

அன்று மாலை ஏழுமணியாக இருக்கலாம். எங்கள் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. “மாஸ்டர்! மாஸ்டர்!” என்று கொச்சைத் தமிழில் யாரோ அழைக்கிறார். முன்னர் நானெங்கோ கேட்ட குரல் இருப்பினும் என்னால் அடையாளம் காணமுடியவில்லை. ஆனால் என் துணைவி வில்வராணி அது சந்தியில் நிற்கும் கும்பலில் உள்ள ஒருவரின் குரலென்று அடையாளம் காட்டினார். நான் கதவைத் திறந்தேன். மனைவி அடையாளம் காட்டிய அந்த நபர்தான் அவர். செல்லமகால் சந்தி தாண்டிச் செல்லும்போது அவ்வப்போது நான் காணும், ஹலோ! சொல்லும், ஆயினும் நெருங்கிப் பழகாத நபர் அவர். இன்றிரவு இப்பகுதியில் உள்ள தமிழர் வீடுகளைத் தாக்கவுள்ளார்கள். மாஸ்டர் வீட்டுக்கு எதுவும் செய்யவேண்டாம் என்று கேட்டுள்ளேன் என்றார். அவர்களும் மனிதர்கள்தானே, இதனை முழுமையாக நிறுத்துங்கள். இப்படி வேண்டினேன். அவர்கள் வேறு பிரதேசத்தில் இருந்து வந்துள்ளனர். என்னால் எதுவும் செய்யமுடியாது என்று கூறி விரைந்தார்.

இத்தகவலை உறுதிப்படுத்த முடியாமை காரணமாக என்னால் எவ்வித நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லை. ஆனால் அயல்வீட்டு பெண்மணியிடம் கொழும்பில் பலபகுதிகளில் நிலைமை சரியில்லை என்றுகூறி வீதி ரோந்து பொலிஸாரின் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்தேன்.

பாலாம்பிகைமாமி, மனைவி, பிள்ளைகள், சின்ன மாமா, யாழ்ப்பாணம் சங்குவேலியில் இருந்து கொழும்புக்கு விடுமுறையில் வந்த சதானந்த அத்தானின்


சிவகாமியம்மா

மூத்தமகள் சாவித்திரி அனைவரும் என்ன செய்வோம் என்று பதறுகிறோம். ஆனால் பெரியம்மா சிவகாமியம்மா ‘காளி ஆச்சி எங்களுடன் இருக்கிறா. ஒன்றும் நடவாது. தைரியமாக இருங்கோ’ இப்படிக்கூற, ‘யதார்த்தம் புரியாமல் பேசுகின்றார்’ என்று அவர் கூற்றை அலட்சியப்படுத்தினோம்.

இரவு பத்துமணியிருக்கும். வீடுகள் உடைபடுகின்றன. எமது வீடும் அதிர்கின்றது. அயல்வீட்டுப் பெண்மணி பொலிஸாரை அழைக்க, அவர்கள் சில வினாடிகளில் அவ்விடம் வர நிலைமை தணிகிறது. எமது வீடுகளுக்கு பொலிஸ் பந்தோபஸ்து வழங்கப்படுகிறது. அங்குவந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எங்கள் வீட்டைச் சுட்டிக் காட்டி இது சிங்களவர் வீடா? என்று சிங்கள மொழியில் கேட்க, இல்லை நான் தமிழன் என்றதும், ஆச்சரியமாக இருக்கிறது என்றார்.

தனது மகன் நரேந்திரனை லண்டன் செல்ல முன்னர் பத்திரகாளி அம்பாளைத் தரிசிக்க வேண்டி திருகோணமலை அழைத்துச் சென்றிருந்த பெரிய மாமா சிவசுப்பிரமணியம் பேருந்து மூலம் இன்னும் சிலமணிநேரத்தில் திரும்புவதாக இருந்தார். நாடு இப்படியிருக்கும் சூழலில் வரும்வழியில் தமது அண்ணாச்சிக்கும் நரேந்திரனுக்கும் என்னவாகுமோ என்று ஏங்கிக்கொண்டிருந்தார் சின்னமாமா நடேசபிள்ளை. பெரியம்மா சிவகாமியம்மா ‘காளி ஆச்சியை வேண்டுதல் செய்யுங்கோ. நல்லதே நடக்கும்.’ – என்று உறுதியாகச் சொன்னார். பெரியம்மா வாக்குப் பலித்தது. இருவரும் இரவு பன்னிரண்டு மணிக்கு பாதுகாப்பாக வந்து சோந்தனர்.

இன்னும் ஒருசம்பவம். காளியாச்சி கருணை எமக்குப் புரிந்தது. பெரிய மாமாவின் இளையமகன் பாலேந்திரன் காளியாச்சி பக்தன். திருகோணமலை பத்திரகாளி கோயில் திருவிழாக் காலத்தில் நோன்பு காத்து பயபக்தியுடன் அங்கப்பிரதட்சனம் செய்பவர். அவர் இக்கலவர காலத்தில் கடமை காரணமாக கண்டி சென்றிருந்தார். அவர் பாதுகாப்பு பற்றியும் கவலையாக இருந்தது. அங்கு முன்பின் அவரறிந்திராத சிங்கள குடும்பங்கள் அவருக்கு அபயமளித்து பேருந்து மூலம் திரும்பும்வேளை அவ்வண்டியை ஒரு கும்பல் மறித்து தமிழர்களை அடையாளம் காணமுயல, அவர் காளியாச்சியை வேண்டுதல்செய்ய, அவரிருக்கையில் அருகேயமர்ந்திருந்த சிங்களப்பெண்மணி ஆபத்தினை புரிந்துகொண்டு தன் மடியிலிருந்த குழந்தையை இவரிடம் வைத்திருக்கக் கொடுத்து, சிங்களத்தில் இவருடன் உரையாட, அக்கும்பல் அந்த வண்டியிலிருந்து இறங்கிச்சென்றது. இவரும் பாதுகாப்பாக கொழும்பு வந்து சேர்ந்தார். நாமும் ஆறுதல் அடைந்தோம்.

இச்சம்பவங்கள் கண்டு, உணர்ந்து காளியாச்சி நம்பிக்கை நமக்கு அதிகரித்தது. சிவகாமியம்மா அவர்களின் வாக்கின் வலிமை புரிந்தது.

செலச்சொல எழுதவல்ல, துணிச்சல்மிக்க மூத்த, பிரபல எழுத்தாளர், காலைக்கதிர் ஆசிரியர் நடேசபிள்ளை வித்தியாதரன் அவர்கள் சிவகாமியம்மா பற்றிச் சொன்ன பின்வரும் கருத்தை எண்ணிப்பார்க்கின்றேன்.

திருகோணமலை பத்திரகாளி அம்பாள் திருத்தலத்திலே, அன்னையின் வழிபாட்டில் தன்னையும், தன்குடும்பத்தையும், தன்னைச் சார்ந்தவர்களையும், தனது சமூகத்தையும் தெய்வ வழிபாட்டோடு, அமைதி, இன்முகம், சாந்தம் ஆகியவற்றோடு அரவணைத்து வழிகாட்டும் புனித பணியில் 20ம் நூற்றண்டின் முதல் எட்டு தசாப்தங்களையும் பயனுள்ளதாக செலவிட்டவர் சிவகாமியம்மா. அவர் வழிகாட்டலில் நாமும், நமது சுற்றத்தாரும் அம்பாள் வழிபாட்டில் ஈடுபட திருவருட் சித்தம் கிட்டியது.

சிவகாமியம்மா கூற்று வெறும்பேச்சன்று. யதார்த்தம் என்று புரிந்தது. அவர்தம் கூற்று இன்றும் செவிகளில் ஒலிக்கிறது.

காளியாச்சியை பயபக்தியுடன் வேண்டுதல் செய்யுங்கோ! குஞ்சுகளுக்கு ஒருதீங்கும் நடவாது. வராது!!

(தொடரும்....)

# வடபுலத்தில் இந்திய ட்ரோலர் மீன்பிடிப் படகுகளின் அத்துமீறல்களை உடன் தடுத்து நிறுத்த வேண்டும்!

## புதிய ஜனநாயக மாக்சிச லெனிசக் கட்சி வற்புறுத்தல்

கொழும்பு, ஒக். 08

இலங்கையின் மன்னார் முதல் முல்லைத்தீவு வரையான கடற்பரப்பில் இந்திய ட்ரோலர் மீன்பிடிப் படகுகள் அத்துமீறிப் புகுந்து, சட்டவிரோதமான முறைகளைப் பயன்படுத்திப் பெருமளவு மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றன. அதனால், எமது கடல் வளம் சூறையாடப்படுவதுடன், நம் மீனவர்களின் மீன்பிடித் தொழில் மிகப் பெரும் இழப்புகளைச் சந்தித்து வருகின்றமையுடன் அவர்களின் அன்றாட வாழ்வாதாரம் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகியும் உள்ளன எனப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நமது மீனவர்களின் வலைகளும் படகுகளும் ஏனைய தொழில் உபகரணங்களும் இந்திய ட்ரோலர் படகுகளில் வருவோரால் அழித்து நாசமாக்கப்படுகின்றமையுடன், எமது மீனவர்கள் தாக்குதல்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். இவ்வாறு வடபுலத்து மீனவர்கள் நீண்ட காலமாக அனுபவித்து வரும் இந்திய ட்ரோலர் படகுகளின் அத்துமீறல்களும் அழிவு வேலைகளும் மீன்வளக் கொள்ளையும் அண்மைய மாதங்களில் அதிகரித்துச் செல்கின்றன.

அண்மையில் மன்னார், நெடுந்தீவு, பருத்தித்துறை, குருநகர், வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவை அண்மித்த கடற்பரப்புகளில் இந்திய அத்துமீறல்களும் தாக்குதல்களும் வலைகள் அழிப்புகளும் இடம்பெற்றுள்ளன. இவற்றை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதேவேளை, மேற்படி இந்திய ரோலர் படகுகளின் அத்துமீறல், மீன் கொள்ளை, அடாவடித்தனங்கள், அழிவு வேலைகளை இலங்கை அரசாங்கமோ, மீன்பிடி அமைச்சரோ அல்லது வடபுலத்து தமிழர் தரப்புக் கட்சிகளின் தலைமைகளோ, அவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ மீனவர்களின் அபயக்குரலுக்கு செவி சாய்ப்பவர்களாக இல்லை. இவர்கள் எல்லோரும் 'நக்குண்டார் நாவிழந்தார்' போன்ற நிலையில் இந்திய ஆட்சியாளரையோ அல்லது இந்தியப் பெரும் ரோலர் படகு முதலாளிகளையோ விரல் நீட்டி நியாயம் கேட்க முடியாத அடிமைத்தன நிலையில் இருந்து வருகிறார்கள். இவர்களிடம் நமது மீனவர்கள் எதிர்பார்ப்பதற்கு ஒன்றுமே இல்லை. அதற்காக வடபுலத்து மீனவர்கள் இழப்புகளைத் தாங்கிக் கொண்டு எவ்வளவு காலத்துக்கு இருக்க முடியும்.

ஆதலால் வடபுலத்து மீனவர்கள் தங்களுக்குள் ஐக்கியப்பட்டு வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுக்க வீதியில் இறங்குவதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதையே எமது கட்சி வலியுறுத்துகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெள்ளைப்பூடு கொள்கலன் விவகாரம் குறித்து பம்பலப்பிட்டி வர்த்தகர் சி.ஐ.டியினரால் கைது

ச.தொ.ச. நிறுவனத்துக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட சுமார் 150 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட 56 ஆயிரம் கிலோ வரையிலான இரு வெள்ளைப் பூடு கொள்கலன்களை, உயர் அதிகாரிகளின் எந்த அனுமதியும் இன்றி, மூன்றாவது தரப்பொன்றுக்கு விற்பனை செய்த விவகாரத்தில், மற்றொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த 55 வயதான வர்த்தகர் ஒருவரே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ கூறினார்.

இந்த வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில், பேலியகொடை விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் இது வரை விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் கடந்த வாரம் விசாரணைகள் சி.ஐ.டியினருக்கு மாற்றப்பட்டது.

இந் நிலையிலேயே சி.ஐ.டியின் சமூகக் கொள்ளை விசாரணைப் பிரிவினரிடம் இந்த விசாரணைகள் கையளிக்கப்பட்டன. குறித்த விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சுதத் குமார தலைமையிலான குழுவினர் முன்னெடுத்த விசாரணையில் மேற்படி வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியத் தொடர்பை உடைய என்.எஸ். என்டர் பிறைசர்ஸ் எனும் நிறுவனத்தை நடத்தும் கிரிஸ்ன குமார் வசங்ஜி என்னும் வர்த்தகர் சி.ஐ.டிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு அதன் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வர்த்தகர் வத்தளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேக நபர் வெள்ளைப்பூண்டு ஒரு கிலோவை 135 ரூபாவுக்கு ச.தொ.ச. ஊடாக மோசடியான முறையில் கொள்வனவு செய்துள்ளார் எனவும், அப்போதும் ஒரு கிலோ வெள்ளைப்பூண்டின் பெறுமதி 355 ரூபா வரை காணப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந் நிலையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் 3 சந்தேக நபர்கள் இந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நம்பிக்கைத் துரோகம், சாட்சிகளை மறைத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் இரு வர்த்தகர்கள் பேலியகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். மட்டக்குளியைச் சேர்ந்த கமல் குமார, வேலாயுதம் ஶ்ரீதரன் ஆகியோரே அவர்கள் ஆவர்.

அத்தோடு இந்தச்சம்பவம் தொடர்பில், ச.தொ.ச. தலைமையகத்தின் பிரதி பொது முகாமையாளர் (நிதி) அனுர சிசிர பெரேரா கைது செய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் அவர் ஒரு லட்சம் ரூபா ரொக்கம் மற்றும் 50 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுழிபுரம் வீடொன்றிலிருந்து கூரிய ஆயுதங்கள் மீட்பு

## ஒருவர் கைது

யாழ்ப்பாணம் – சுழிபுரம் ஜே – 170 கிராமசேவகர் பிரிவில் பொலிஸ் விசேட அதிரடிப்படை நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலில் வீடொன்றில் இருந்து, கோடரி மற்றும் முள் கம்பி சுற்றப்பட்ட கட்டை உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டமையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

பொன்னாலை – சுழிபுரம் பகுதியில் வீடொன்றில் வாள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் உள்ளன என பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த புலனாய்வு தகவலின் அடிப்படையில் வீடு ஒன்று முற்றுகையிடப்பட்டது. மேற்படி வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டிருந்த நிலையில் வாள் ஒன்றும் கூரிய ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

இதனை அடுத்து வாளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 25 வயது இளைஞர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபரை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். அதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்க்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் குறித்த பகுதியில் உள்ள பிறிதொரு வீட்டில் இருந்தும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வாள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்கள் வீட்டில்; ஆசிரியர்கள் வீதியில்!



ராஜபக்ஷ அரசின் சாதனை என்கிறார் ரஞ்சித் மத்தும பண்டார

இரு வருடங்களாக மாணவர்கள் வீட்டில் இருக்கின்றனர், ஆசிரியர்கள் வீதியில் இருக்கின்றனர், இது தான் இந்த ராஜபக்ஷ அரசின் பெரும் சாதனையும், நாட்டின் பெரும் வேதனையும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை ஆசிரியர் தினம். ஆனால், ஆசிரியர்கள் வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். எனவே, ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பில் நாடாளுமன்றம் கவனம் செலுத்த வேண்டும்.

இரு தரப்பினரின் பிரச்சினைகளுக்கும் இந்த அரசிடம் தீர்வில்லை. இதுதான் இந்த ராஜபக்ஷ அரசின் பெரும் சாதனையும், நாட்டின் பெரும் வேதனையும்.

மாணவர்களின் எதிர்காலம் வீணடிக்கப்படுகின்றது. எனவே, இது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

# மிகவும் இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் முல்லைத்தீவில் பாடசாலைகளை ஆரம்பிக்க முடிவு

நாடளாவிய ரீதியில் முன்பள்ளிகள் மற்றும் 200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி திறக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளை ஆரம்பித்தல் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனின் தலைமையில் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பின்வரும் சுகாதார நடைமுறைகளைப் பேணியவாறு பாடசாலை கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி முத்துக்குமாரசுவாமி உமாசங்கர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் அனைவரும் தடுப்பூசி போடப்பட்டிருக்க வேண்டும். நீண்டகாலமாகப் பாடசாலைகள் திறக்கப்படாதிருந்தமையால் முன்னாயத்தமாக சிரமதான பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போது டெங்கு பரவும் காலநிலை ஆரம்பித்திருப்பதால் டெங்கு பெருகும் இடங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பாடசாலைக்கு உள்வரும் பிரதான நுழைவாயில் மற்றும் வகுப்பறைகளில் தொற்று நீக்கும் திரவங்கள் சரிவரப் பயன்படுத்தப்பட வேண்டும்.

மேலும் சிறு பிள்ளைகள் பாடசாலைக்கு வருவதால் சுகாதார நடைமுறைகளை அவர்களுக்கு காணொலி ஊடாகக் காட்டுவதால் அவர்களைச் சரிவரச் செயற்படுத்த முடியும்.

சமூக இடைவெளிகள் கட்டாயமாகப் பேணப்பட வேண்டும். கழிவகற்றல் செயற்பாடுகள் தொடர்பாக அதிக அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக மாணவர்கள் பயன்படுத்திய முகக்கவசங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கொவிட் தொற்றால் ஏற்படுகின்ற அறிகுறிகள் தொடர்பாக ஆசிரியர்கள் அதிக அவதானத்தைச் செலுத்துவது நல்லது.

குறிப்பாக மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள அறிகுறிகள் அவர்களது குடும்பத்தில் யாருக்காவது ஏற்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக அறிவது சிறந்தது.

இதனைவிடச் சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரிடம் தொடர்பில் இருக்க வேண்டும்.

பெற்றோர்கள் வாகனங்கள் மூலம் பிள்ளைகளைக் கொண்டு வரும்போது அங்கு ஏற்படக்கூடிய சமூக இடைவெளிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்கள் உணவருந்தும் இடங்களில் அதிக சமூக இடைவெளிகள் பேணப்பட வேண்டும். கிணறுகள் நீண்டகாலமாகப் பயன்படாதிருப்பதால் குளோரின் இட்டு அவற்றைத் தூய்மைப்படுத்துவது சிறந்ததாகும்.

இவற்றைப் பாடசாலைகளில் பின்பற்றச் செய்வதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அதிக அவதானம் செலுத்தப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி எம்.உமாசங்கர், மாவட்ட தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர்.வி.விஜிதரன், பிரதேச வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்டச் செயலாளர் லிசோ கேகிதா, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.தமிழ்மாறன், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.முகுந்தன் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## விரதங்களின் விஷேட காலம் – புரட்டாதி



**- தாமரை நாயகன் - (ஆஸ்திரேலியா)**

சைவத்தமிழர்களின்வாழ்வியலில் தமிழ் மாதங்கள் அனைத்திலும் விஷேட தினங்களும்,விரத தினங்களும் விரவி வருகின்றன. புரட்டாசி மாதத்தில் இது இன்னும் அதி விசேடமாகி, மிக முக்கிய விஷேட விரதங்களான புரட்டாசி சனி விரதமும் நவராத்திரி விரதமும் அனுஷ்டிக்கப் படுகின்றன . இவ்வருடம் சனிக்கிழமை விரதம் ஆரம் பித்து நாலாவது சனி நாள் நாளையாகும். புரட்டாசி மாதத்தில் சிலபோது நான்கு சனி நாள்களும், சிலபோது ஐந்து சனி நாள்களும் வருவதுண்டு. இவ்வருடம் ஐந்து சனி நாள்களாகும்.

சூரிய பகவானுக்கும் சாயாதேவி அன்னையாருக் கும் புதல்வராகப் பிறந்த சனி பகவானை மனத்திருத்தி விரதமிருந்து வழிபடும் தினம் இதுவாகும். சனீஸ்வரன் சிறந்த சிவபக்தர் என்பதால் சைவ மக்களும், புரட்டாதி மாசம் புதன் கிரகத்துக்குரியது – புதன் பகவானின் அதிதேவதையாக மகாவிஷ்ணு விளங்குவதால் அவரை வழிபடும் பக்தர்களும் புரட்டாசிச் சனிநாளி னைப் புனித நாளாகக்கொண்டு விரதமிருந்து சனீஸ்வரனைத் துதித்து வருகின்றார்கள்.

ஆரம்பத்தில் சிவன் மற்றும் விஷ்ணு ஆலயங்க ளில்சனீஸ்வரருடையவழிபாட்டுக்கு வசதிகள் இருந்தன. இன்று அநேகமாக பல ஆலயங்களிலும் நவக்கிர கங்களைப் பிரதிஷ்டை செய்து, சனீஸ்வர வழிபாட்டுக்கு, வசதிகளைச் செய்து வருகின்றார்கள். இந்தியாவில் திருநள்ளாறு எனுமிடத்தில் உள்ள தனி சனீஸ்வரன் கோயில் மிகப் பிரசித்தமானது. நளமகாராஜா இங்கு வழிபட்டு தோஷம் நீங்கியதாக வரலாறுண்டு.

சனீஸ்வரருக்குரிய நிறம் கறுப்பு. வாகனம் காகம். தானியம் எள். கரும் துளசி, கருங்காக்கனவன் மலர் கொண்டு அர்ச்சனை செய்யலாம். சனிக்கிழமைகளில் கறுப்புத் துணியில் எள் பொட்டலம் கட்டி மண் சட்டியில் வைத்து எள்நெய்த் தீபமேற்றி, கறுப்புப் பட்டுத் தான மளித்து சனீஸ்வரரை வழிபட்டால் தோஷம் நீங்குமென ஆன்றோர் உரைப்பர். சைவ மக்கள் புரட்டாதி மாதத்தில் பிரதி சனிக்கிழமைகளில் தவறாதும் ஏனைய சனிக் கிழமைகளிலும் மேற்படி வழிபாட்டில் ஈடுபட்டு வரு கின்றனர். புரட்டாதி மாதத்தின் மற்றுமோர் முக்கிய விரதம் நவராத்திரி விரதம். பெண்மைக்கு முக்கியம் தருவது நவராத்திரி வழிபாடு. சக்தியின்றி இயங்காத வாழ்வின் சத்தியத்தை எமக்கு விளங்க வைப்பதற் காக இவ் வழிபாட்டினை சைவத் தமிழ் மக்கள் புனிதமாகப் பேணி வழிபடுகின்றார்கள்.

முன்னொரு காலத்தில் உலக பேரழிவு யுகத் தின் முடிவில் இறைவன் உலகை மீள் உருவாக்கம் செய்ய முனைந்தபோது இச்சை சக்தியும் (இச்சை –விருப்பம், அது எவ்வாறு தோன்றியது என அறிந்தபோது ஞானசக்தியும்(ஞானம்–அறிவு) தோற்றம் பெற்றன. பின் கிரியா சக்தியால்(கிரியா– ஆக்கல்/படைத்தல்) இறைவன் உலகைப் மீளப் படைத்தான் என மூன்று சக்திகளை நவராத்திரி வழிபாடு விளக்குகின்றது. மேற்படி மூன்று சக்தி களுக்கும் தெய்வ வடிவம் தந்து நவராத்திரி வழிபாட்டில் முதல் மூன்றுநாள்களும் இச்சா சக்தி யாக துர்காதேவியையும் அடுத்து மூன்று நாள்களும் கிரியா சக்தியாக இலட்சுமியையும் கடைசி மூன்று நாள்களும் ஞான சக்தியாக சரஸ்வதியையும் வேண்டித் துதித்து இறை அருளினை சைவத் தமிழ் மக்கள் பெற்றுக் கொள்கின்றார்கள். துர்க்கையை துதித்தால் தீய எண்ணங்கள் மறைந்து மன உறுதி கிடைக்கப் பெறும். இலட்சுமியை வணங்கின் செல்வம், நல்ல ஒழுக்க விழுமியங்கள், உயர்ந்த பண்பாடு, கருணை, மனிதநேயம் கிடைக்கப் பெறும்.சரஸ்வதி தேவியின் வழிபாட்டால், ஞானம், கல்வி, கலைகளில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளலாம் என்று தெளிவு பெற்றுள்ளனர். ஒன்பது நாள்கள் நடைபெறும் இவ்வழிபாட்டினைத் தொடர்ந்து பத்தாம் நாள் விஜய தசமித் திரு நாளாகும்.

எருமைத்தலை கொண்ட மகிஷாசுரன் என்ற அரக்கன் தேவர்களுக்கும் மற்றும் மனிதர்களுக்கும் தொடர்ந்து பெரும் துன்பங்களைக் கொடுத்து வந்தான். இதனால் துர்காதேவி, இலட்சுமி தேவி, சரஸ்வதி தேவி ஆகிய மூன்று சக்திகளும் ஒன்றுசேர்ந்து விஜய சாமுண்டீஸ் வரியாக அவதாரம் எடுத்து அவ்வரக்கனுடன் போர்புரிந்து, அவனை அழிக்கமுடியாது தவித்து, இறுதியில் சிவபெருமானின் அருளாசியுடன் மீண்டும் போர்புரிந்து வன்னி மரமொன்றில் மறைந்திருந்த அவ்வசுரனை, அந்த மரத்தினை சங்காரம் செய்வதன் மூலம் நவமி நாளில் அழித்ததாக வரலாறு உண்டு. மறுநாள் இவ்வெற்றியை தேவர்கள் ஆயுதபூஜை செய்து கொண்டாடினர். இதுவே விஜயதசமி என விம ரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. அசுரனை அழித்த சம்பவத்தின் அடையாளமாக இன்று கோவில்களில் கன்னி வாழை வெட்டும் விழா நடைபெறுகின்றது.இவ்வருட நவராத்திரி வழிபாடு நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.மறைந்த உயிர்களுக்கான மஹாளய விஷேட விரத பிரார்த்தனை புரட்டாசி மாதத்தில் நடை பெறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## அன்பெனும் தவம் செய்வோம்!

அன்பே சிவம், அன்பு கனிந்த கனிவே சக்தி என்பது தமிழர் சமயமாகும். அதுவே உயரிய விழுமிய மாகும். அன்பின் பெறுமதியை உணர்ந்த வாழ்வு அழகானது. அன்பின் வழியது உயிர் நிலை. ஆயி னும் அதனைப் பயிலும் களமாக அமைந் தது குடும்பம். குடும்ப உறவுகளுக்குள் செழுமை பெறும் அன்பானது விரிந்த சமூக உறவுகளுக்கான அடிப்படையாகும்.

நவீன வாழ்வியல் மாற்றங்களிடை குடும்ப நிறுவனம் தன் அடிப்படையான விழுமிய மேன்மைகளை தொலைத்திடும் அவலம் எம் சிந்தனைக்குரியது.

‘அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது’ – என்பது தமிழ் வேதம்

அன்புக்குப் பதிலாக பொருளாதார நலன் இடம்பிடித்ததும் அறம் பிழைத்த மேலாண்மை ஆக்கிரமித்ததும் குடும்ப நிறுவனத்தையே பலவீனமாக்கும். பெற்று வளர்த்த தாய், தந்தையரையே முதியோர் இல்லத்து தனித்தி ருக்க வைக்கும் பெருந்துயர் வரை இதன் விளை வுகள் வலியாகும்.



இந்த வலி தீர வழியென்ன?


‘செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே!
தவம் செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம் –
வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை–
அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு’

–என அழகாக சொன்னானே பாரதி.

அன்பெனும் தவம் செய்வோம்!
அனைத்து வலிகளையும்
வெல்வோம்!!

**– பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்–**

## ஆலயங்களின் அமைப்பும் வழிபாடும்



**– சிவஸ்ரீ.குக.மதிவதனக் குருக்கள், (சிட்னி முருகன் கோயில் , ஆஸ்திரேலியா)**

அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு என்று தத்துவ நூல்களும் ஞானிகளும் கூறுவதுண்டு. அண்டம் என்பது நாம் வாழும் இப் பிரபஞ்சம். பிண்டம் என்பது பஞ்ச பூதங்களினாலான எமது உடம்பு. அண்டங்கள் யாவற்றிலும் பரந்து வியாபித்து இருக்கும் பேரருள் சக்தி நிறைந்த இறைவன், எமது உயிரிலும் அவ்வாறே கலந்து இருக்கின்றான்.

ஆலயங்களினதும், திருவுருவங்களினதும் அவசியம் பற்றி நோக்கினால்,இவை எப்படி அமைய வேண்டும், எந்தெந்த அளவுகளில் அமைக்கப்படவேண்டும் எனப் பல விதிமுறைகளை சமய நூலகள் உரைக்கின்றன. அது மட்டுமல்லாமல், பலவிதமான கிரியைகள், அவை நிகழவேண்டிய மண்டபங்களும் அவற்றின் அமைப்பு முறைகளும், அளவுகளும், அங்கு பயன்படும் பொருள்களும் ஆகமங்களிலும் சிற்பசாஸ்திர நூல் களிலும் விரிவாகக் கூறப்படுகின்றன.

ஆலயமானது எமது உடம்பின் அமைப்பிலேயே நிறுவப்படுவது கவனிக்கத்தக்கது. ஆலயமும் அதன் கோபுரமும் தேரின் அமைப்பும் மனித உடலை நினைவூட்டும் வகையில் அமைக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் தோற்ற மாக ஆலயம் அமைகிறது. கருவறை சிரசினையும் அர்த்த மண்டபம் கழுத்தினையும் மஹா மண்டபம் மார் பினையும் தரிசன மண்டபம் வயிற்றுப் பகுதியினையும் அடுத்த மண்டபங்கள் கால்களையும்,ராஜகோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன.

கொடித்தம்பத்தின் அடியில் இருக்கும் சிறிய விநாயகர் எமது மூலாதாரத்தில் அரூப சொரூபியாக இருக்கிறார். இவரை மூலாதார கணபதியாக வழிபடுகின்றோம்.

யோக மார்க்கத்தில் ஆறாதார ஸ்தானங்களென மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணி பூரகம்,அநாக தம்,விசுத்தி,ஆஜ்ஜை என்பன முறையே கொடித்தம்பம், பலிபீடம், தரிசன மண்டபம், மஹாமண்டபம், அர்த்த மண்டபம்,கர்ப்பக் கிரகம் என அமைகின்றன.

ஆலய கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகிறது. அடுக்கடுக்காக அமைந்த தளங்கள் பல்வேறு உல கங்களையும்,உலக வாழ்க்கையின் பலவித அனுப வங்களையும். கோபுரத்தில் அமைந்த சிற்பங்கள் இறை வனின் பலவிதமான திருவிளையாடல்களையும் சாதாரண உலகியல் நடைமுறைகளையும் குறித்து நிற்கின்றன. கீழே அகன்றும் மேலே ஒடுங்கியும் சென்று கலசத்துடன் நிறைவுறும் ஆலயக் கோபுரமானது பரம்பொருளில் உளக்குவிப்பினைக் கொள்ளும் மன உறுதியும் மேலான எண்ணங்களில் சூழ்ந்து நிற்றலும் என ஆன்ம ஈடேற்றத்தின் குறியீடாக விளங்குகின்றது. ஆலய அமைப்பும் அத்தகையதே.

ஆலயங்களில் உள்ள காண்டா மணியும் கோபுரமும் தூரத்தில் உள்ளோரையும் இறையுணர்வை ஊட்டி ஆலய இருப்பிடத்தைக் காட்டி உதவுகின்றன. மங்கல மணி ஓசைக்கு தேவர்களை அழைக்கும் சக்தியும் தீயவற்றை தூர அகற்றும் இயல்பும் உண்டென சாஸ் திரங்கள் கூறுகின்றன. ஆலய சுற்று மதில்கள், ஆலய வீதிகள், பரிவாரத் தெய்வங்கள் இவை யாவற்றையும் நோக்கின் ஒரு இராஜ சபை நினைவில் வரும். வீதி உலாவும், குடை, தீவட்டி, ஆலவட்டம், மங்கல வாத்தி யங்கள் போன்றன இராஜ மரியாதைக்குரியவை.

இவ்வகையில் ஆலய அமைப்பு,உருவத் திருமே னிகள், வாகனங்கள், இயந்திரங்கள், வாத்தியங்கள்,பயன் படும் பொருள்கள் போன்றன உள்ளடங்கிய திருக் கோயில்களே எமது சைவ சமய வழிபாட்டின் அடித்தள மாக அமைகின்றன. ஆழ்ந்த தெளிவான சிந்தனையுடன் நிறுவப் பெறும், எமது சைவ ஆலயங்களின் அமைப்பு, நோக்கம், ஆகியவற்றின், தத்துவார்த்தமான உண்மை களை விளங்கி,உள்ளுணர்ந்து சைவசமயத்தின் மேன் மையை உலகுக்கு அறிவிப்போமாக.

மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்

# தமிழ் அரசியல் கைதிகளை யாழ். சிறைக்கு மாற்ற முடிவு?

## சாதகமாகப் பரிசீலிப்பதாக அரசு சமிக்ஞை

**கொழும்பு, ஒக்டோபர் 08**

**அநுராதபுரம் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம் சிறைக்கு மாற்றுவது குறித்து சாதகமாக பரிசீலிக்கப்படுகிறது என கைதிகளின் சட்டத்தரணியான எம்.ஏ.சுமந்திரன் எம்.பிக்கு அரசுத் தரப்பில் இருந்து தகவல் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது.**

சுமந்திரன் எம்.பி. நேற்று காலை நாடாளுமன்றத்தில் நீதியமைச்சர் அலி சப்ரியை நேரடியாகச் சந்தித்து இந்தக் கைதிகளின் நிலைமை குறித்துப் பேசினார். அப்போதே கைதிகளை யாழ்ப்பாணம் மாற்றுவதற்கான சாதக நிலை பரிசீலிக்கப்படுவதாக நீதியமைச்சர் சுமந்திரன் எம்.பியிடம் தெரிவித்தார் எனவும் அறிய வந்தது.

மேற்படி கைதிகளின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவில் மனுவின் சட்டத்தரணி சுமந்திரன் என்பதும் அந்த மனுவில் எதிர் மனுதாரராக குறிப்பிடப்பட்டு இருப்பவர்களில் நீதியமைச்சரும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் வழக்குக்கு அப்பால் இரு பிரமுகர்களும் இந்த விடயம் குறித்து நேற்று கலந்துரையாடி இருக்கின்றனர்.

இதேசமயம் உயர்நீதிமன்றத்தின் விசேட உத்தரவு மற்றும் அனுமதியோடு நேற்று அனுராதபுரம் சிறையில் மேற்படி எட்டு அரசியல் கைதிகளையும் அவர்களது சட்டத்தரணியான கேசவன் சயந்தன் தனிமையில் சந்தித்தார். உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அவர் தமது கட் சிக்காரர்களான மேற்படி கைதிகளை வேறு யாருடைய பிரசன்னமும் இல்லாமல் தனித்தனியே சந்திப்பதற்கான வசதி வழங்கப்பட்டது. அப்போது அவர் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் புதிய சத்தியப்பிரமாண ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வரும் சனிக்கிழமையன்று அநுராதபுரத்தில் சமாதான நீதிவான் முன்னிலையில் கைதிகளிடம் ஒப்பங்கள் பெறப்படும் எனத் தெரிகின்றது. அதன்பின்னர் இந்தப் புதிய விடயங்கள் அடங்கிய சத்தியப்பிரமாணக் கடிதங்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிகிறது.

இதேசமயம் நேற்று பகல் அநுராதபுரத்தில் கைதிகளைச் சந்திக்க சென்றிருந்த சட்டத்தரணி சயந்தன் கைதிகளின் நிலைமை குறித்து அநுராதபுரம் சிறை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார். அச்சமயத்தில் கைதிகளை யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் ஆராயப்படுகின்றன என சட்டத்தரணி சயந்தனுக்கும் தெரியப்படுத்தப்பட்டதாக அறிய வந்தது.

இந்தச் சூழ்நிலையில் அநுராதபுரத்தில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அவர்களின் சொந்த இடமான வடக்கில் உள்ள சிறைகளுக்கு மாற்றுவதற்கான சாத்தியங்கள் அதிகமாக இருப்பதாக தெரிகின்றது.

# நாமலுக்கு புதிய பதவி



இலங்கை - பிரான்ஸ் நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் புதிய தலைவராக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இந்தியாவின் கருத்துக்கு செவிசாய்த்து மாகாணத் தேர்தலை உடன் நடத்துங்கள்

## நாடாளுமன்றில் அரசிடம் ஹக்கீம் வலியுறுத்து

காலம் கடந்துள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல்களை விரைவில் நடத்தி ஆளுநர்களின் அதிகாரத்தில் உள்ள மாகாணங்களுக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்க அரசு துரித கவனம் செலுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்தி 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும். எனவே, இந்தியாவின் கருத்துக்கு அரசு செவிசாய்க்க வேண் டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) மற்றும் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கு முன்னைய, நாம் அங்கம் வகித்த அரசும் பொறுப்புக் கூறியாக வேண்டும். அப்போது எல்லை நிர்ணயங்கள் என்ற காரணிகளைக் கை யில் எடுத்துக்கொண்டு காலத்தைக் கடத்தியது மட்டுமல்லாது இறுதியாக இவற்றைக் கையாண்ட அமைச்சரே எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிராக வாக்களித்த மிகப்பெரிய நகைச்சுவையும் அப்போது இடம்பெற்றது.



ஆகவே, இந்த அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குக் கூடிய கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

# மேலும் பிற்போடப்பட்டன பிரதான இரு பரீட்சைகள்

இலங்கையில் தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகள் மேலும் பிற்போடப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது, கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஓகஸ்ட் மாதம் நடைபெறும் குறித்த பரீட்சைகள் இரண்டும் கொரோனா பரவல் காரணமாக நவம்பர் மாதம் வரை பிற்போடப்பட்டிருந்தன.

இந்நிலையில், நவம்பர் மாதத்திலும் பரீட்சைகளை நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை என்று இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சைகளுக்கான புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சேனாநாயக்க முதல் கோட்டாபய வரைக்கும் எவருக்கும் நாடு குறித்து அக்கறை இல்லை

## கூட்டமைப்பு எம்.பி. ஜனா குற்றச்சாட்டு

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான டி.எஸ்.சேனாநாயக்க முதல் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரையில் எவருக்கும் நாடு தொடர்பில் ஒரு பொதுவான கொள்கை இல்லை. ஒரு முகம் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களைத் தடை செய்துவிட்டு, அவர்களைப் பேச்சுக்கு ஜனாதிபதி அழைத்திருப்பது நகைச்சுவையானது.

ஜனாதிபதியின் புத்தி மங்கியுள்ளதையே இது காட்டுகின்றது.

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம். அதுபோலவே ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஜனாதிபதியின் உரை தமிழ் மக்களுக்கு வைகுண்டம் போகும் கதையாக இருக்கின்றது.

உள்நாட்டுப் பொறிமுறையின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என ஜனாதிபதி ஐ.நாவில் பேசி மூச்சு விடுவதற்கு முன்னர் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு மனித உரிமைகளின் மாண்பையும் சிறைக் கைதிகளின் நலன்களையும் சிறப்பாகக் கவனித்தார்.

இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறையின் விசித்திரத்துக்கு லொஹானின் அராஜகம் ஓர் உதாரணம்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 13 ஆவது திருத்தச் சட்டம் போதாது. 13 பிளஸுக்குச் செல்வேன் என்றார்.

எதை எப்படிப் பேசி சர்வதேச சமூகத்தை நமது ஆட்சியாளர்கள் தம் வசப்படுத்துகிறார்கள் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

முன்னாள் ஜனாதிபதிகளான டி. எஸ். சேனாநாயக்க முதல் தற் போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரையில் எவருக்கும் நாடு தொடர்பில் ஒரு பொதுவான கொள்கை இல்லை. ஒரு முகம் இல்லை.

நாட்டின் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் இல்லை - என்றார்.